# செந்தமிழ்

தொகுதி : 93 அக்டோபர் 1999 பகுதி : 10

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **மா.தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் **நா.பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு.நா.குமரன் சேதுபதி, | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா.தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா.சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே.எஸ்.டி.இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என்.சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ.பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ.சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே.திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க.சி.அகமுடைய நம்பி | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பேரறிஞர் | தமிழண்ணல் | மதுரை |
| பேரறிஞர் | செ.கந்தசாமி | முதல்வர் |
| டாக்டர் | என்.சேதுராமன் | மதுரை |
| பேரறிஞர் | ம.ரா.போ.குருசாமி | கோயம்புத்தூர் |
| பேரறிஞர் | ச.மெய்யப்பன் | சிதம்பரம் |
| பேரறிஞர் | சி.கதிர் மகாதேவன் | மதுரை |
| பேரறிஞர் | கு.துரைராசு | எட்டையபுரம் |
| பேரறிஞர் | அ.அ.மணவாளன் | சென்னை |
| பெரும்புலவர் | இரா.இளங்குமரன் | அல்லூர், திருச்சி |
| பேரறிஞர் | அ.தட்சிணாமூர்த்தி | தஞ்சாவூர் |
| பேரறிஞர் | எஸ்.எம்.கமால் | இராமநாதபுரம் |
| பேரறிஞர் | ஈ.கே.இராமசாமி | மதுரை |
| பேரறிஞர் | சே.அரிராமநாதன் | மதுரை |
| பேரறிஞர் | அ.மா.பரிமணம் | தஞ்சாவூர் |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ.. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் **மா.தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் **நா.பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

# பொருளடக்கம்


1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் 338
பேரறிஞர் நா.பாலுசாமி

2. முத்துராமலிங்கத்தேவரின் சமயப்பற்றும் புலமையும் 340
பேரறிஞர் கோம்திசூரியமூர்த்தி

3. பாரதிதாசனின் மானுட நேயம் 345
பேரறிஞர் தெ. திருஞானமூர்த்தி

4. இலக்கணக் கல்வியின் போக்கு 354
பேரறிஞர் ஏ. ஆதித்தன்

5. இலக்கியங்களில் இந்துசமயம் 364
நா.பா.

- பேரறிஞர் நா.பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

**சூத்திரம் 402**

*சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்*

(பொ-ரை) வடசொற்கள் சிதைந்து வந்தாலும் அவை தமிழ் ஒலியோடு ஒத்திருக்குமானால், அவற்றையும் செய்யுளில் நீக்காது கொள்வர். சிதைந்து - உருமாறி. வரையார் - நீக்கார்.

(எ-டு.) அரமியம் (நிலாமுற்றம்), தசம் (பத்து) போன்றவை. இவை வடமொழிச் சிதைவுகள்.

**சூத்திரம் 403**

*(செய்யுள் விகாரம்)*

**அந்நாற் சொல்லும் தொடுக்கும் காலை**
**வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்**
**விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்**
**நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்**
**நாட்டல் வலிய என்மனார் புலவர்.**

(பொ-ரை) மேற்கூறப்பட்ட நால்வகைச் சொற்களும் செய்யுளில் வரும்போது சில இடங்களில் மென்மை வன்மையாதலும், வன்மை மென்மையாதலும், குறைவதனை விரித்தலும், விரிந்தவற்றைச் சுருக்குதலும், குறுகி வருதனை நீட்டலும்,

நீண்டவற்றைக் குறுக்கலும் ஆகிய ஆறுவகையான விகாரங்களும் செய்யுள் இனிமை நோக்கிச் செய்யப்படும்.

நாட்டல் - நிலைபெறச் செய்தல்.

(எ.டு)

1) குறுக்கை இரும்புலி - இத்தொடரில் **குறுங்கை** என்னும் மென்றொடர் குறுக்கை என வன்மை பெற்றது

2) குன்றியலுகரம் - இங்கு **குற்றியலுகரம்** என்னும் வன்றொடர் குன்றியலுகரம் என மென்மை பெற்றது.

3) தண்ணம்துறைவன் - இங்கு **'அம்'** பெற்று விரிந்தது.

4) மழவரோட்டிய - இங்கு **மழவரை** ஓட்டிய என்பது 'ஐ' விகுதி தொக்கது.

5) வீடுமின் - **விடுமின்** என்பது நீண்டது.

6) அழுந்துபடு விழுப்புண் - **ஆழ்ந்துபடு** என்பது குறுகியது.

## சூத்திரம் 404

### *(பொருள்கோள் நான்கு)*

**நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று**
**அவைநான்கு என்ப மொழிபுணர் இயல்பே.**

(பொ-ரை) நிரல்நிறையும், சுண்ணமும், அடிமறியும், மொழி மாற்றும் என இந்நான்கு வகையில் சொற்கள் செய்யுளில் புணர்ந்து நின்று பொருள் பயக்கும். விளக்கம் பின்வரும் சூத்திரங்களில் காண்க.

(தொடரும்)

# முத்துராமலிங்கத் தேவரின்
# சமயப்பற்றும் புலமையும்

*-பேரறிஞர். கோமதிசூரியமூர்த்தி*

முத்துராமலிங்கத்தேவர் பிறந்த ஊர் கமுதிக்கு அருகிலுள்ள பசும்பொன் கிராமமாகும். இவர் 1908-இல் அக்டே ¨ ார் மாதம் 30ஆம் நாள் பிறந்தார். தந்தை உக்கிரபாண்டியததேவர். தாய் இந்திராணி அம்மையார். தேவர் அவர்கள் சமயப்பற்று மிக்கவர். சமய சாத்திர நூல்களில் புலமை மிக்கவர்.

**சைவசமயப்பற்று**

சைவர்கட்குரிய சமயச் சின்னங்கள் புறச்சின்னம், அகச்சின்னம் என இருவகைப்படும். புறச்சின்னமானது, திருநீறு அணிதலும், உருத்திராக்கம் அணிதலும். அகச்சின்னமாவது, ஐந்தெழுத்து ஓதல். திருநீறு அணிந்த பரந்த நெற்றி, தூய கதராடை, உருத்திராட்ச மாலை இவையே தேவரின் அணிகலன். இவை அவர்தம் தூய்மையையும், எளிமையையும், எல்லா உயிர்களிடத்தும் அவர் கொண்டுள்ள இரக்கத்தையும் உணர்த்தும். படித்த பள்ளிக்கூடத்தில் திருநீறு அணிவதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டபோது, பள்ளியை வேண்டுமானால் மாற்றிக் கொள்வேனே தவிர, நெற்றியில் திருநீறு அணியும் பழக்கத்தைக் கைவிடமாட்டேன் என்ற உறுதியுடன் இருந்தார். அவர் இறக்கும்வரை நெற்றியில் நிறைந்த திருநீற்றோடு விளங்கினார்.

**மக்களிடையே தெய்விக உணர்வைத் தூண்டல்**

தேவர் தேசியத்தையும், தெய்விகத்தையும் தம் இரு கண்களாகக் கொண்டு செயல்பட்ட ஓர் உத்தமர். மக்களிடையே தெய்விக உணர்வு உண்டாக்க முயன்றவர். அவர் ஆலய வணக்கத்தின் நுட்பத்தை எளிய உவமை மூலம் விளக்குகிறார். சின்னஞ்சிறு பள்ளிக்கூடங்களில் குழந்தைகட்கு அட்டையால் செய்யப்பட்ட அணாக்கள் கொண்டு கணிதம் போதிக்கப்படுவது

நமக்குத் தெரியும். அந்த அட்டைகளையே உண்மையான நாணயங்களாக எண்ணச் செய்து கணக்குப் போடுகின்றனர். கணக்கைக் குழந்தைகள் புரிந்து கொள்ள முதலில் ஓர் உருவப் பொருளைப் பயன்படுத்துவது ஆரம்ப வழி. அதுபோல, ஆலய வழிபாடும் உண்மையான பொருளைக் காண்பதற்காக எளிய மக்கட்குக் காட்டியுள்ள ஆரம்ப வழியாகும் என்று தேவர் கூறுகின்றார்.

ஒரு கிறித்தவர் ஆலயத்திலுள்ள திருவுருவம் வெறும் கல் தானே என்றபோது தேவர், ஒரு பாதிரியார் வீட்டில் தாய், மனைவி, அக்கா, தங்கை, அண்ணி என்று பல பெண்கள் இருக்கலாம். எல்லாப் பெண்களும் ஒன்றாகுமா? வேறுபாடு உண்டுதானே. அதுபோல, வீதியில் கிடக்கும் கல்லுக்கும், கோயிலிலுள்ள விக்கிரகத்திற்கும் வேறுபாடு உண்டு என்பதை உணர்த்தியவர்.

**இறையருளை உணர்த்துதல்**

"சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அல்லால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலன்"

என்று திருநாவுக்கரசரும்,

"நலம் இலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலம் இலன் பேர் சங்கரன்"

என்று உமாபதிசிவமும், இறைவன் தன்னை வழிபடுபவர்கட்கே நன்மை செய்வான்; தன்னை வழிபடாதவர்கட்கு அருள் செய்யான். ஆனால், அவன் பாரபட்சமில்லாதவன் என உணர்த்துகின்றனர். முத்துராமலிங்கத் தேவர் இக்கருத்தைப் பாமர மக்களுக்கும் புரியும் வண்ணம் எளிய உவமை மூலம் உணர்த்துகின்றார். "மழை பெய்கிறது. ஒருவன் அந்நீரைப் பிடிக்கப் பெரிய பாத்திரம் வைத்தான். அதனால் நிறைய நீர் பெற்றான். மற்றொருவன் சிறிய பாத்திரம் வைத்தான். ஆதலால் சிறிதளவே நீர் பெற்றான். மற்றொருவன் பாத்திரத்தைச் சரியாக வைக்கவில்லை. அது குப்புறக் கவிழ்ந்துவிட்டது. எனவே, அவனுக்கு நீர் கிடைக்கவில்லை. அதுபோல, பகவான் கருணை என்பதும், எல்லோருக்கும் பெய்கிறதே தவிர, அது பாரபட்சத்தோடு இல்லை. எவன் எந்தெந்த அளவு

பாத்திரத்தை என்னென்ன முறையில் வைக்கிறானோ அந்தந்த அளவு அவனுக்குக் கிடைக்கின்றது என்று தேவர் கூறுகின்றார்.

**திருமுறைகளை மேற்கோள் காட்டல்**

முத்துராமலிங்கத் தேவர் சொற்பொழிவாற்றும் போது பொருத்தமான இடங்களில் திருமுறைத் தொடர்களையோ, பிற சைவ இலக்கியப் பாட்ல் தொடர்களையோ, சாத்திர நூற்கருத்துக்களையோ மேற்கோளாகக் காட்டுவார்.

நுணுக்கமானவற்றை அறிவின் கண் கொண்டு நோக்க வேண்டும் என்பதை உணர்த்தவரும் முத்துராமலிங்கத்தேவர்,

"முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்

அகத்தில் கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்"

என்ற திருமந்திரப்பாடலை மேற்கோளாகக் காட்டுகிறார்.

வானசாத்திரம் நட்சத்திரங்களை எண்ண முடியாது. தேவர் அவர்கள் இங்கு,

"அண்டப்பகுதி உண்டைப் பிறக்கம் அளப்பெரும்

தன்மை வளப்பெரும் காட்சி, ஒன்றினுக் கொன்று

நின்றிடை பகரின் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"

என்ற திருவாசகத் தொடரை மேற்கோளாகக் காட்டுவார்.

**தாயுமானவர் பாடலை மேற்கோள் காட்டல்**

மதுரை வெள்ளியம்பல மண்டபத்தில் 12-6-49இல் நடைபெற்ற தமிழ்நாடு சன்மார்க்கத் தொண்டர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி தேவர் ஆற்றிய பேருரையில், தோன்றி அழிவனவெல்லாம் பொய். தோன்றி அழியாதவை மெய் என்று கூறி அதற்கு அரணாக,

"பொய்வளர் நெஞ்சினர் காணாத காட்சியே

பொய்யிலா மெய்யறிவிற் போத பரிபூரண

அகண்டிதாகாரமாய் போக்குவரவற்ற பொருளே"

என்ற தாயுமானவ பாடலை மேற்கோளாகக் காட்டினார்.

**ஞானியின் இயல்பு உணர்த்துதல்**

முற்கூறிய தமிழ்நாடு சன்மார்க்கத் தொண்டர் மாநாட்டில்

"அருள்மறை தந்த வள்ளலார்" என்ற தலைப்பில் தேவர் பேசும்பொழுது பின்வருமாறு கூறுகின்றார்:

துறவறமானது எந்தப் பற்றையும் ஒழித்து எதனையும் தன் வயப்படுத்தும் சக்தியுடையதாகும். அதனை உணர்த்துவதற்கே காவியாடையை அணிந்து வருகின்றனர். காவி ஆடையின் நிறம் தீயின் நிறமாகும். தீயானது எதையும் தன்மயமாக்கி எரித்து விடும் குணமுடையது. அதைப்போன்று தன் மனத்திடை எழும் எவ்வகைப் பாசத்தையும் எரித்துத் தன்மயமாக்கிக் கொள்வதே ஞானியின் உள்ளம்.

**சமய சமரசம் உணர்த்தல்**

முற்கூறிய மாநாட்டில் தேவர், "மதங்கள் பலவானாலும் ஆண்டவன் ஒருவனே. மதங்களெல்லாம் பல நதிகள் பல இடங்களில் உற்பத்தியாகிப் பல பாதைகளில் சென்று முடிவில் ஒரே சமுத்திரத்தில் சங்கமமாவதைப் போலப் பல மதப் பிரிவுகளும் ஒரே ஆண்டவனை அடையும் மார்க்கமே" என்று கூறியது தேவரது சமய சமரசத்தை உணர்த்தும்.

**சரித்திர நூற்புலமை**

மதுரை திருவள்ளுவர் கழகத்தினர் 13.2.1949இல் மதுரை சௌராட்டிர பெண்கள் பாடசாலையில் நடத்திய திருக்குறள் அட்டாவதான வைபவத்திற்குத் தேவர் தலைமை தாங்கி ஆற்றிய பேருரையின் ஒருபகுதி அவரது சாத்திர நூல் புலமையைக் காட்டுகின்றது.

"எவ்வாறு நீராகிய ஒரே பொருள் பலவித வியாக்கியானத்திற்குள்ளாகிறதோ, அதேபோன்று மனிதனின் மனோநிலையும் பல மாறுதல்கட்கு உள்ளாகிறது. மனோநிலை நான்கு வகைப்படும். அவை இருள், மருள், தெருள், அருள் என்பவையாம். இவற்றுள் முதலாம்நிலை இருள் ஆகும். மாயையின் பலத்தினால் உண்மைநிலை அறியாது, கண் தெரியாது தடுமாறும் நிலையே இருளாகும். இந்நிலையிலிருந்து உலகபந்தம், மாயை இவற்றின்றும் விடுபட வேண்டும் என்ற உள்ளக்கிளர்ச்சி ஏற்படுவதே மருள் என்றழைக்கப்படும். அந்நிலையிலிருந்து பல

அனுபவங்களைப் பெறப் பாடுபட்டுப் பல நோன்புகள் நோற்றுப் பின்னர் அடையும் பயன்தான் தெருள் என்னும் தெளிவு. தெருள்நிலையை அடைந்ததும் பூரணநிலையை அடைவதில்லை. அதிலும் பல அனுபவங்களைக் கற்றுத் தெளிந்த பின்னரே அருள் சுரக்கும். அந்நிலையை அடைந்தோர்க்குப் புறக்கண்களின் பார்வையைப் பற்றிய கவலையே ஏற்படுவதில்லை. ஞானக்கண் பெற்று அவன் இறைவனின் அருள் வடிவத்தைக் கண்டு ஆனந்தமடைகிறான். இந்நிலையே அருள்நிலை. இந்நிலையிலி ருந்தே பரம்பொருளுடன் ஐக்கியமாகும் தன்மை ஏற்படுகின்றது என்று தேவர் கூறுகின்றார் (இதயநாதம், பக்.111-112). சைவசித்தாந்தம் உயிர்களின் நிலையைக்கேவலம் (இருள்நிலை), சகலம் (மருள்நிலை), சுத்தம் (அருள்நிலை) என மூன்றாகக் கூறுகின்றது. கேவலம் பிறப்பிற்கு முந்திய நிலை. ஆணவமலத்தில் மட்டும் அழுந்தி அறியாமை வயப்பட்டுள்ள நிலை. சகலம் கருவி கரணங்களோடு கூடிய பிறப்பெடுத்த நிலை. இந்நிலையில் அறிவு விபரீதமாகும். பின் பாசத்திலிருந்து விடுபட்டு அருளோடு ஒன்றிய நிலை சுத்தம் எனப்படும். இந்நிலையில் உயிர் வியாபக அறிவைப் பெற்றிருந்தாலும் இறைவனைத் தவிர வேறொன்றையும் அறியாது. சைவசித்தாந்தம் கூறும் மூவித நிலைகளைத் தேவர் நான்காக விரித்துக் கூறுகின்றார்.

தேவர் உடற்கூறு பற்றிப் பேசும்பொழுது மூவித வினைகள் பற்றிக் கூறுவது அவருடைய சித்தாந்தப் புலமையை உணர்த்தும். "வினை மூவகைப்படும். சஞ்சிதம் பூர்வவினை. பிராரந்தம் தற்போது அனுபவிக்க வேண்டுபவை. ஆகாமியம் இப்போது சேர்த்து வைக்கும் பாவம். பிறந்து அனுபவிக்க வேண்டியவை. பாவிகள் மூன்று வினைகளையும் அனுபவித்துக் கொண்டே போவார்கள். அறிவாளிகள் ஆகாமியமில்லாமல் மற்ற இரு வினைகளையும் அனுபவிப்பார்கள். ஞானிகளோ சஞ்சிதம், ஆகாமியம் இரண்டுமில்லாமல் பிராரத்வத்தை சேற்றிலுள்ள பிள்ளைப் பூச்சியானது சேறு சிறிதும் ஒட்டாது வாழ்வதைப் போலப் பற்றற்று நடத்துவார்கள். பரோபரகாரத்தைச் செய்து மறைவார்கள்" என்று தேவர் கூறுகின்றார்.

# பாரதிதாசனின் மானுட நேயம்

*-பேரறிஞர். தெ.திருஞானமூர்த்தி*

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் மனித ஆற்றலைப் பரக்கப் பேசியவர் மகாகவி பாரதிதாசன் ஆவார். மனிதன், மானுடம் என்னும் கருத்தலைகள் இவர்தம் படைப்புக்களில் ஆற்றலோடும் எழுச்சியோடும் கையாளப்பெற்றுள்ளன. இவருக்கு முன்னும் பின்னும் மனிதனைப் பாடமாட்டேன் என்பதே சிலரின் இலக்கியக் கொள்கையாகக் கூறப்பட்ட சூழலில் இவர் தம் படைப்புக்கள் இதற்கு எதிரான கலகக் குரலாகவும் புரட்சிக் குரலாகவும் வெளிப்பட்டன. மானுட நேயமே பாரதிதாசனின் இறுதி இலக்காகும். இவ்விலக்கை அடைவதற்குத் தடையான எல்லாவற்றையும் அவர் எதிர்த்துப் பாடினார். கடவுள், சாதி, வருக்கம், பெண்ணடிமை, தேசியம், ஏகாதிபத்தியம் என மானுட நேயத்திற்குத் தடையாய் நின்ற யாவும் அவர் கண்டனக் குரலிலிருந்து தப்பவில்லை.

கடவுள், மதத்தின் பேரால் ஆதிக்க சக்திகள் மனிதர்களைப் பிளவு படுத்திக் கொடுமைப்படுத்திய சூழலில் பாவேந்தர் கடவுள் ஒரு கற்பிதம், அதனை அடையும் நெறியாகக் கூறும் மதமும் ஒரு கற்பிதம், கடவுளும் மதமும் மனிதனின் படைப்புக்கள், மனிதன் தான் உயர்ந்தவன் எனக் குரல் கொடுத்தார். பாரதிதாசனின் கடவுள் மறுப்பு தந்தை பெரியார் ஈ.வெ.ராவின் கருத்துக்கள் மற்றும் மார்க்சிய இயங்கியலை அடிப்படையாகக் கொண்டு அமைந்து மானுடத்தின் பெருமை பேசுகின்றது.

"கடவுள் என்ற நாமதேயம்
கழறிடாத நாளிலும்
உடைமையாவும் பொதுமையாக
உலகுநன்று வாழ்ந்ததாம்"

என்கிறார். எல்லாம் அவன் செயலே எனப் பிறர் பொருளை வெல்லம் போல் விழுங்கும் மனிதருக்கும் கடைசிவரைக் கடவுள் காப்பார். ஆகவே உழைப்பீர் நீர் என உரைக்கும் வீணருக்கும்,

"மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே என் செந்தமிழே கண்ணுறங்கு"

என ஆண் குழந்தைத் தாலாட்டிலும்,

"எல்லாம் கடவுள் செயல் என்று துடைநடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப் புதுமைசெய வந்தவளே"

எனப் பெண் குழந்தைத் தாலாட்டிலும் மானிடரின் மகத்துவம் பேசுகின்றார் பாரதிதாசன். கருமான் செய்து வைத்த உருவில் இல்லை கடவுள், மெய்யறிவே கடவுள் அறிவொன்றே தெய்வம் (குறிஞ்சித்திட்டு, ப.98) என்பது அவர் கருத்தாகும்.

மனிதனை நேசிப்பதற்கும் மனிதாய நோக்கிற்கும் மதம் தடையாய் இருந்தபோது மதத்தையும் எதிர்த்துப் பாடினார். மதத்தின் பேரால் மனிதன் இழிவுபடுத்தப்படுவதற்கும் சுரண்டப்படுவதற்கும் எதிரான உரிமைக்குரலே பாவேந்தரின் மத எதிர்ப்புக் குரலாகும்.

"நாய்களைப் போல்தமக் குள்ளே - சண்டை
நாளும் வளர்க்கும் மதங்கள்
தூயன வாம்என்று நம்பிப்-பல
தொல்லை யடைகுவ தின்றி
நீஎனல் நானெனல் ஒன்றே - என்ற
நெஞ்சில் விளைவது வாழ்வு"

என மனித ஒருமைப்பாடு காண்கிறார். மதம், சாதி கடந்த மானுடப் பொதுநோக்கு வளரவேண்டும் எனக் கருதிய பாவேந்தர் அயல் மதம் அயல் சாதிக்காரனை அழிப்பது ஒழுக்கங்கெட்ட செயல் எனக் கண்டிக்கிறார்.

"அண்டை வீட்டான் அயல்மதம், சாதி
அழியவேண்டும் - அந்தோ ஒழுக்கமா?
பல நூற்றாண்டுகள் பாழ் போயினவே!
*மலப்புழு நிலையில் மாய்கின்றீரே!"*

என வருந்துகின்றார்.

இந்துமதம் சொல்லுகின்ற யாதும் இசுலாம் கூறுகின்ற 'ஒலியும் கடவுளல்ல. அதற்கு எவ்வுருவும் எப்பெயரும் இல்லை. ஊருக்குழைக்கும் உணர்வே கடவுள் என உலக மாந்தருக்குக்

கடவுளின் வடிவம் காட்டுகிறார் பாரதிதாசன். ஒற்றுமை, பகுத்தறிவு பொதுநலம் இவற்றுக்கு மதம் எதிரி எனக் கருதினார். அதனால் தான் 'மதம்' எனல் 'தமிழ் வையத்தின் பகை' எனக் கூறினார். தான் காணவிழைந்த இலட்சிய நாட்டில் மதமில்லை எனக் கனவு காண்கிறார்.

"மதம் என்ற கருங்கற் பாங்கில்
மல்லிகை பூப்ப தில்லை!
மதியினில் மயக்கம் என்ற
நஞ்சொன்றே மலரும்! நாட்டில்
புதியதோர் பொல்லாங் கென்னும்
எரிமலை புகையும்! மக்கள்
இதுநலம் இதுதீ தென்னும்
எண்ணமும் இழந்து போவார்!"

என மானுட ஒருமைக்கு மதம் தடையென எச்சரிக்கின்றார்.

கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள் போல் இந்த உலகில் எண்ணிலா மதங்கள் மனித குலத்தைச் சுட்டெரிக்கின்றன (பா.க.ப. 186) என்கிறார். உள்ள பல சண்டையெல்லாம் ஒழியும் மதம் ஒழிந்தால் என்பது பாவேந்தரின் அசைக்க முடியா நம்பிக்கையாகும்.

"திக்கெட்டும் உள்ளவர் யாரும் – ஒன்று
சேராது செய்வதே மதமாகு மானால்
பொய்க்கட்டு நீக்குதல் வேண்டும்".

என மானுட ஒருமைக்காக மதக்கட்டுத் துறக்க வேண்டும் என்கிறார்.

இந்தியாவில் சாதி என்பது ஒற்றுமைக்கு விடப்படும் ஓர் அறைகூவலாய் உள்ளது. வருக்க நிலை ஒருவனால் ஒரு காலத்தில் மாற்றிக் கொள்ளக் கூடியதாகும். ஆனால் சாதி எனப்பெறும் வருணம் இங்கு மாற்றிக் கொள்ளக் கூடியதாக இல்லை. ஏனெனில் இந்தியச் சமூகத்தின் அடிப்படை அலகாய்த் திகழ்வதே சாதி எனும் நிலைக்கு அது ஆதிக்கம் செலுத்துகின்றது. மனித இதயத்தைக் கூறுபோடும் ஓர் சமூக அரக்கன்; சுரண்டலின் வடிவம்; மேலாதிக்கத்தின் ஆயுதம்; மனிதகுல ஒருமைப்பாட்டின் எதிரி; மானுட நேயத்திற்கு வைக்கப்பட்ட வெடிகுண்டு எனப் பல்தளச்

செயற்பாடுமிக்கதாக இங்குச் சாதி விளங்குகிறது.

சாதிக் கொடுமையை எதிர்த்து காலங்கள் தோறும் கலகங்கள் செய்யப்பட்டிருந்தாலும் சாதி இல்லை என்ற மெய்மையை இயக்க நிலையிலும் கொள்கை நிலையிலும் எதிர்கொண்ட தனிப்பெருங்கவிஞர் பாரதிதாசன் ஆவார். 'பஞ்சமர், பார்ப்பனர் என்ற பாகுபாடு பாரதநாட்டின் பழிச்சின்னம்' என உணர்த்தினார். கொடியோர், பஞ்சமர் என்று சுடும்பேர் வைத்திட்டாரடி சகியே என நாணுகின்றார்.

பிறப்பில் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் மனுநீதியை மறுத்தார். முகத்தில், தோளில், இடையில், காலில் பிறந்ததாகச் சொல்பவரை முட்டாளே, தொழும்பனே, எருமையே, கழுதையே எனக் கண்டித்தார். நான்முகன் என்பார் உளனோ நாயே இவையெல்லாம் பச்சைப் புளுகடா போக்கிலியே எனத் தெளிவுபடுத்தினார். பாவேந்தரின் கண்டனக் குரல் சற்று அழுத்தமாக ஒலித்தாலும் சாதியின் இருப்பை நோக்க இதற்கான தேவையும் அவசியமும் உள்ளன என்றே கூறவேண்டும். சாதித் தளும்புகளோடு வாழ்ந்து தீர்க்கும் மனித சமூகத்தில் இக்குரல் வேதனையின் குரல், நேர்மையின் குரல் எதார்த்தத்தின் குரல் என்பன தெளிவாகும்.

"என்றுதான் சுகப்படுவதோ? - நம்மில்
யாவரும் 'சமானம்' என்ற பாவனை இல்லை - அந்தோ
ஒன்றுதான் இம்மானிடச்சாதி - இதில்
உயர்பிறப் பிழிபிறப் பென்பதும் உண்டோ?"

எனச் சாதிகளைந்த மானுட ஒருமையை விழைகிறார் பாரதிதாசன்.

மனிதநேயம் மிக்க கவிஞன் பொதுமை உணர்வில் நாட்டம் கொள்வது தவிர்க்க முடியாது. பாவேந்தர் வருக்கங்கள் அற்ற பொதுமைச் சமூகத்தைக் காண விழைந்தார். எனவே வருக்க ஒடுக்கு முறையை எதிர்த்துப் பாடினார். வருணம் வருக்கமாக இங்கு வளர்ந்துள்ளது என்பதை அறிந்த பாவேந்தர் பாணியில் பின்னாளில் வருக்க முரண்பாட்டை விட வருண முரண்பாட்டை முன் வைத்துப் பேசினார். பாவேந்தரின் வருக்க எதிர்ப்புக்கு அகக் காரணியாக அவர் மனித நேயமும், புறக்காரணிகளாக

சிங்காரவேலர், பெரியார் ஈ.வெ.ரா., பாரதி ஆகியோரின் தொடர்பும் சிந்தனைகளும் மற்றும் பொதுவுடமைக் கருத்துக்களும் அமைந்தன எனச் சுட்டலாம்.

வருக்கங்கள் அற்ற சமூகம் காணவிழைந்த பாவேந்தரின் குரல் ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரலாக வெளிப்பட்டது.

"நடவுசெய்த தோழர்கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர்
உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்"

என்றார்.

காடுகளைந்தது, நல்ல கழனி திருத்தியது; உழவு புரிந்து நாடாக்கி நல்ல புவியைப் படைத்தது தொழிலாளர். மலையைப் பிளந்தது; அலையைக் கடந்தது; உலையில் இரும்பை உருக்கியது எல்லாம் அவரின் ஆற்றல். எல்லாமும் படைத்தவர்கள் ஒன்றுமில்லாதவர்களாய் இருப்பதை இனி ஏற்கமாட்டோம் என்கிறார்.

இந்த உலகினில் யாரும்-நல்
இன்ப மெனும் கரை யேறல்
சந்தத மும்தொழி லாளர்-புயம்
தரும்து ணையன்றி வேறே
எந்த விதத்திலும் இல்லை"

எனத் தெளிவுபடுத்துகின்றார்.

கடல்மேற் குமிழிகள் அழகன், குறிஞ்சித்திட்டு மல்லிகை, புரட்சிக்கவி உதாரன் போன்ற கதை மாந்தர்கள் உழைக்கும் வருக்கத்திற்காக உரிமை முழக்கமிடுகின்றனர்.

"இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
இது எனதென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்"

என்பதே பாரதிதாசன் காணவிழைந்த புதியதோர் உலகமாகும்.

பெண்களை இழிவுபடுத்திவிட்டு மானுடம் தழைக்க முடியாது. எனவே பெண்ணிய ஒடுக்குமுறையான கல்வி மறுப்பு, குழந்தை மணம், முதியோர் மணம், விதவை மறுமண மறுப்பு முதலியவற்றை எதிர்த்துப் பேசினார். பெண்கல்வியை வற்புறுத்தினார். கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம் அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை என்றார். எனவே நல்ல தலைமுறை தோன்ற பெண்கல்வி மிகத்தேவை என வலியுறுத்தினார்.

"மண்ணில் பட்டால் மாசுபடும் என்றுஎன்
கண்ணில் வைத்தே காப்பேன்"

எனப் பெண்குழந்தையை வரவேற்றுப் பாடினார். பெண்ணடிமை ஒரு நாட்டின் மண்ணடிமைக்கு மூலகாரணம் என எச்சரித்தார். பெண்ணிற்குச் சொத்துரிமை கோரினார். பெண்ணடிமைப்பட்டால் பாதி மானிடம் பாழ் என்றார்.

"அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப்போல் வாழுவதும்
கெஞ்சுவது மாகக் கிடக்கும் மகளிர்குலம்
மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர்பகுதி!
ஆனமற் றோர்பகுதி ஆண்மை எனப் புகல்வேன்!"

என மானிடரில் பாதி அடிமையானால் பிற்பாதி சாதிக்க இயலா சக்தியற்ற திரளாய்ப் போய்விடும் எனப் புலப்படுத்தினார்.

"பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடுதன்னில்
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற்பாயப்
பருகுநாள் எந்தநாளோ?"

என மானுடம் முழுமை பெறும் நாள் எந்த நாள் எனக் கனவுகாண்கிறார் பாவேந்தர்.

பல்வேறு தேசிய இனங்கள் வாழும் ஓர்நாட்டில் ஒரு தேசிய இனம் பிற தேசிய இனங்கள் மீது மேலாதிக்கம் செலுத்த முற்படுகையில் அந்நாட்டில் தேசிய உணர்வு

கேள்விக்குரியதாக்கப்படுகின்றது. இவ்வகையில் இந்தியத் தேசியத்தின் மீது பாரதிதாசன் வினாத் தொடுக்கின்றார். பாவேந்தரின் இந்திய எதிர்ப்பு என்பது வட்டார மனப்பாங்கால் விளைந்தது அன்று. மனிதாய உணர்வால் எழுந்ததாகும். இனம், மொழி, நாடு, பண்பாடு, அரசியல் எனப் பல்தளங்களில் இந்தியத் தேசியம் என்ற பெயரில் ஒடுக்குமுறை மேற்கொள்ளப்பட்டபோது பாவேந்தர் அதனை எதிர்த்தார்.

"இந்தியாவில் தேசியம் என்கிற பதமே தப்பான வழியில் மக்களை ஏமாற்றிப் பிழைக்க ஒரு கூட்டத்தார் - அதாவது மேல்சாதியினர் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களால் கற்பனை செய்யப்பட்டு அவர்களுக்குத் தாசர்களாக இருந்தால்தான் பிழைக்க முடியும் என்று கருதிய சில பார்ப்பனரல்லாத படித்தவர்கள் என்பவர்களால் ஆதரிக்கப்பட்டு, இவ்விரு கூட்டத்தார் சூழ்ச்சியாலும் பாமர மக்களை ஏமாற்றிச் சிலர் பிழைக்க உபயோகிக்கப்பட்டு வரும் ஒரு பாதகமும் அபாயகரமான அர்த்தமற்ற வார்த்தையாகும் என்றார் தந்தை பெரியார். இச்சூழலில் எழுந்ததே பாவேந்தரின் இந்திய மறுப்பாகும்.

பிறிதொரு மனிதனுக்கோ பிறிதொரு நாட்டிற்கோ அடிமைப்பட்ட மானுடர் சமத்துவமாக மதிக்கப் பெறார். மேலும், அவர்தம் உழைக்கும் ஆற்றல் சுரண்டப்படுவதோடு அவர்களின் இன்னபிற சமூக, பண்பாட்டு நடவடிக்கைகள் இழிவுபடுத்தப்படும். மானுட ஒருமையும் மானுட சமத்துவமும் காண விழைந்த பாவேந்தர் உள்நாட்டு ஆதிக்க, சுரண்டல் சக்திகளை எதிர்த்தது போலவே ஏகாதிபத்தியத்தையும் ஏகாதிபத்திய நடவடிக்கைகளையும் எதிர்த்தார்.

இந்தியாவை அடிமைப்படுத்திய ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பாடினார்.

"நெஞ்சி லிருக்குது தேசப்பணி - இந்த
நேரத்தில் மாயை மறைக்கு தென்றீர்
அஞ்சிக் கிடப்பதில் ஆசையெனில்-உங்கள்
ஆண்மைக் குடிக்குள்ள ஆண்மை யெங்கே"

என விடுதலை பெறுதலே ஆண்மையென உணர்த்தினார். தேசசேவகன் இதழில் பாவேந்தர் எழுதிய பாடல்கள் அவர்தம் பிரிட்டிசு ஏகாதிபத்திய எதிர்ப்புக்குச் சான்று பகர்கின்றன. கதர் இராட்டினப் பாட்டில் பாவேந்தரின் தலைவி காதல் இருப்பது மெய்யெனில் நூல் நூற்றுக் கதராடை அணிந்து அந்நியர் நூலைத் தலை கவிழ்த்து அதற்கப்புறம் என்னைக் கூடுவாய் எனத் தலைவனுக்குக் கட்டளையிடுகிறாள்.

கிரோசிமா, நாகசாகியில் அணுக்குண்டு வீசிய அமெரிக்காவின் செயலை உலகை அழிக்கும் முயற்சி எனக் கண்டித்தார். வியத்நாம் மீது அமெரிக்கா படையெடுத்தபோது நிறவெறி, உலக அன்பற்ற அதன் முதலாளித்துவ மனப்பாங்கை முறியடித்தல் உலக நாட்டு மன்றத்தின் கடமையென அறிவுறுத்தினார். குவெட்டா பூகம்பத்தில் இறந்தோர்க்காக வருந்தினார். பாரிசு விடுதலையை வரவேற்றுப் பாடினார். திபேத் விடுதலை பெறத் தடையாய் இருந்த சீனாவைக் கண்டித்தார். இவ்வாறு உலக மாந்தர்களை எல்லாம் நேசித்த பாவேந்தர் மானுடத்திற்கான பகைசக்திகள் எவற்றையும் கண்டிக்கத் தவறவில்லை. இப்பிரபஞ்சத்தில் மனித குலம் வாழ மானுட நேயம் மலர அவர் படைப்புக்கள் என்றென்றும் கட்டியங்கூறும் ஆற்றல் வாய்ந்தவையாகும்.

ஆட்டுவித்தால் ஆடும் பொம்மை, கடைத்தேற வழியறியா நாய் என மனிதரைக் கண்ட சூழலில் பாவேந்தர் மானிடமென்பது புல்லோ, மரக்கட்டையோ அன்று; மானிடம் என்பது குன்று. வாழ்வின் வல்லமை 'மானிடத்தன்மை' என்றே உணர்த்துகின்றார். மதத்தால், விதியால் நம்பிக்கைச் சிறகொடிந்த மனிதனுக்கு அவன் யார் என்பதை அவர் உணர்த்தத் தவறவில்லை.

"மானிடம் என்றொரு வாளும்-அதை
வசத்தில் அடைந்திட்ட உன்இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும்-இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்"

எனத் தெளிவுபடுத்துகின்றார்.

மானுடப் பெருமை உணரா குள்ள மனிதரைப் பிள்ளைப்பூச்சி, புன்மைத்தேர், கன்னங்கருத்த இருட்டின் கரை என இடித்துரைத்த பாவேந்தர் மனிதரில் நீயுமோர் மனிதன் என்பதில் பெருமைகொள் என்கிறார். வீட்டோடு வீட்டையும், நாட்டோடு நாட்டையும் இணைத்து வானை இடிக்கும் மலைமேல் ஏறு; ஏறிநின்று பாரடா உனது மானிடப் பரப்பை, உன்னுடன் பிறந்த பட்டாளத்தை என்குலம் என்று உனைத் தன்னுடன் இணைத்துக்கொண்ட மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சி கொள் என்கிறார்.

"அறிவை விரிவுசெய்! அகண்டமாக்கு
விசாலப் பார்வையில் விழுங்கு மக்களை!
அணைந்துகொள்! உன்னைச் சங்கமமாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேதமில்லை
உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்
புகல்வேன். உடைமை மக்களுக்குப் பொது."

என உலகமாந்தர்க்கு அறைகூவல் விடுக்கின்றார். மானிட சமுத்திரம் நானென்று கூவிய பாவேந்தர் குள்ள மனிதர்களை இடித்துரைத்ததை இங்கு நினைவில் கொள்ளுதல் வேண்டும். இந்தத் தாக்குதல் இல்லாமல் கிழட்டு வேதாந்தம் பேச பாவேந்தர் ஒன்றும் சமயத் துறவியல்லர். போர்க்குணம் மிக்க கவிஞனின் வெளிப்பாடு என்றே இதனைக் கொள்ளுதல் வேண்டும்.

வேற்றுமைக்குக் காரணங்கள் இனம், நிறம், மொழிஅல்ல. இவைதாம் காரணம் எனில் மானுடம் மனிதன் எனும் சொற்கள் பொருளற்றுப் போய்விடும். வேற்றுமைக்குக் காரணங்கள் பொருளும் கல்வியுமே ஆகும் என்கிறார். எனவேதான்,

"மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்".

நூற்களும், நூல்நிலையங்களும் தேவையென வலியுறுத்தினார் பாவேந்தர்.

# இலக்கணக் கல்வியின் போக்கு ★

-பேரறிஞர். ஏ.ஆதித்தன்

1.0 சுதந்திரத்திற்குப் பின்னர் அதாவது தொடக்க காலத்தில் (1948-80) பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் இலக்கணக்கல்வி ஓரளவு சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது எனலாம். குறிப்பாக மொழியியல் தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பெற்ற பின்னர் இலக்கணக் கல்விக்குப் பல்கலைக்கழங்களில் முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. ஆனால் 1980ஆம் ஆண்டிற்குப் பின்னர் இக்காலம் வரை அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் இலக்கணக்கல்வி பின்னடைவு பெற்றுள்ளமையினைக் காணமுடிகின்றது.

இவ்வீழ்ச்சிக்கு இலக்கணம் என்பதன் விளக்கம் கிடைக்கப்பெறாமை, இலக்கணக் கல்வியின் நோக்கம் விளக்கப்பெறாமை, இலக்கணப் பகுதியில் காணப்பெறும் சிக்கலான பகுதிகளுக்குத் தெளிவு கிடைக்கப்பெறாமை, இலக்கணப் பாடத்திட்டத்தின் வரையறை இன்மை, இலக்கணத்தைக் கற்பிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அணுகுமுறையினை அறியாமை, இலக்கணக் கல்வியாளர்களின் தெளிவின்மை போன்ற பல காரணங்களைக் குறிப்பிடலாம்.

1.1 இலக்கணம் எனக் குறிப்பிட்டவுடன் பலருடைய சிந்தனைக்குத் தொல்காப்பியம், நன்னூல் போன்ற மரபிலக்கணங்களின் செய்திகள் தான் நினைவில் வருகின்றன. இலக்கணம் என்பது ஒரு மொழியின் அமைப்பினை விவரிக்கும் பகுதியாகும். இது எழுத்துமொழிக்குரியதாகவோ அன்றிப் பேச்சு மொழிக்குரியதாகவோ அமையும். இது ஒரு குறிப்பிட்ட காலத்தில்

---

★ 1998ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறைக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பெற்ற கட்டுரை.

ஒரு குறிப்பிட்ட குழுவினரால் பேசப்பெறும் மொழியின் அமைப்பினை விவரிக்கும் வகையில் அமையும்.

தொல்காப்பியம் என்பது தொல்காப்பியர் காலத்தில் பயன்படுத்தப்பெற்ற தமிழ்மொழியின் அமைப்பினை விவரிக்கும் பகுதியாகும். பொதுவாக மொழியின் அமைப்பு எழுத்து, சொல், தொடர் என்ற நிலையில் விளக்கப் பெறும். தொல்காப்பியத்தில் இம்மூன்று பகுதிகளும் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இருபகுதிகளிலும் விளக்கப்பெறுகின்றன.

இலக்கணம் என்பது ஒரு மொழியின் அமைப்பு இப்படித்தான் அமையவேண்டுமென்று வரையறுத்து விதிகள் கூறுவதில்லை. அவ்வாறு விதிகளைக் கூறும் நிலையில் அது கட்டளை இலக்கணம் (prescriptive grammar) என்று குறிப்பிடப்பெறும். இத்தகைய இலக்கணங்கள் நிலைத்து நிற்பதில்லை. ஒரு மொழியின் அமைபபினை விளக்கிக்கூறும் இலக்கணம் விளக்க இலக்கணம் (descriptive grammar) என அழைக்கப்பெறும்.

தொல்காப்பியம் ஒரு விளக்க இலக்கணமே. ஆனால் சிலவிடத்து கட்டளை இலக்கணத்திற்குரிய கூறுகள் காணப்பெறுவதாகச் சுட்டுதல் இயலும். நன்னூல் பவணந்தி முனிவர் காலத்தில் பயன்படுத்தப்பெற்ற தமிழ்மொழியின் அமைப்பினை விவரிக்கின்றது. ஆனால் சில இலக்கணநூல்கள் அவற்றின் ஆசிரியர்களின் இலக்கணம் பற்றிய தவறான கோட்பாடு நிமித்தமாகத் தொல்காப்பியத்தைச் சுருக்கமாகக் கூறுவனவாக அமைந்து சமகாலமொழிக்கு முதன்மையிடம் அளிப்பதனைத் தவிர்த்துக் கட்டளை இலக்கணத்திற்குச் சான்று பகரும்வகையில் அமையப்பெற்றுள்ளன.

மரபிலக்கணநூலார் முன்னையோர் அறிவினையும் பயன்படுத்தி இலக்கணவிதிகளை அமைத்துக்கொண்டது மட்டுமின்றி மொழிமாற்ற உணர்வினை உடையராய் இலக்கணச் செய்திகளைச் சுட்டியுள்ளனர். தமிழ் மரபிலக்கணங்கள் பெரும்பாலும் மொழியின் இயல்பினை விளக்கி வரையறுத்துக்

கூறும் விளக்க இலக்கணங்களாக அமைந்திருப்பினும் தம் காலத்திற்கு முந்தைய வழக்குகளின் அடிப்படையில் இதனை இவ்வாறு பயன்படுத்துக என்று குறிப்பிடும் இடங்கள் கட்டளை இலக்கணத்திற்குச் சான்றுகளாக அமையப்பெற்றுள்ளன. எனவே மாணவர்களுக்கு மொழிவரலாற்றுணர்வு ஊட்ட வேண்டியது தேவையாயினும் பெரிதும் கற்பிக்கப்பட வேண்டியது விளக்க இலக்கணமே.

மொழி காலந்தோறும் மாறும் இயல்புடையது. ஆனால் அம்மொழிமாற்றங்கள் பொருட்குழப்பங்களை உருவாக்காமல் மொழியைப் பிறருக்குக் கற்பிப்பதற்கும், கற்பதற்கும் இடர்ப்பாடு தருவனவாக அமைதல் கூடாது. இத்தகைய சிக்கல்களை மொழியியலார் மொழித்திட்டமிடுதல் (language planning) வாயிலாகக் களைந்திடுவர்.

தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் தமிழில் ஏற்பட்டுள்ள மொழிமாற்றங்களைக் குறிக்கும் வகையில் நன்னூல் எனும் இலக்கணநூலைப் பவணந்தி முனிவர் உருவாக்கினார். இக்கால மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாத மொழி அறிஞர்கள் நன்னூலை மட்டும் ஏற்றுக்கொள்வதேன்? மொழிக்கோட்பாட்டினையும் இலக்கணம் பற்றிய விளக்கத்தினையும் புரிந்துகொள்ளாமையால்தான் இத்தகைய போக்குச் சிலரிடத்துக் காணப்பெறுகின்றது[1].

இலக்கணம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியினைச் சார்ந்த மக்கள் பயன்படுத்தும் எழுத்து அன்றிப் பேச்சுமொழியின் அமைப்பினை விவரிக்கும் பகுதியாகும். காலந்தோறும் மாறும் மொழியின் அமைப்பிற்கேற்ப இவ்விலக்கணமும் மாற்றம் பெறும். இலக்கணம் என்பது ஒரு மொழியில் என்றும் நிலைத்திருக்க வேண்டிய மொழியின் அமைப்பினைச் சுட்டும் விதிகள் எனும் கருத்து முற்றிலும் தவறானதாகும். இலக்கணம் என்றால் என்ன என்பதனைத் தெளிவுபடுத்தாமையால் இலக்கணம் புறக்கணிக்கப்பெறும்

பகுதியாக அமைந்துவிட்டது.

1.2 இனி இலக்கணக்கல்வியின் நோக்கம் எவை என்பதனைக் காணலாம். ஒரு மொழியினைப் பிழையறப் பேசவும், பிழைகளை நீக்கிடவும், செய்யுள், உரைநடை ஆகியவற்றின்கண் காணப்பெறும் சொற்பொருளை அறிந்திடவும், சொல், தொடர் ஆகியவற்றை முறைப்படி அமைத்திடவும், வாக்கியங்களைப் பொருளோடு எழுதிடவும், செய்யுள் வடிவங்களை உணர்ந்திடவும், யாப்பினை அறிந்து கொள்ளவும், பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு ஆகியவற்றிடையே காணப்பெறும் வேறுபாடுகளை உணர்ந்து கொள்ளவும் இலக்கணக்கல்வி பயன்படுகின்றது.

இலக்கணக்கல்வி வாழ்க்கையின் இன்றியமையா மொழிவழக்கிற்கும், மொழித்திறன், இலக்கியப் பயிற்சிக்கும் பயனுள்ளதாக அமைகின்றது. மாணவர்களின் அறிவு வளர்ச்சி, மொழித்திறன், படைப்பாற்றல் போன்றவற்றைத் தோற்றுவிக்க இது உதவுகின்றது. மொழிப்பயன்பாடு உடைய இலக்கியத் திறனாய்வு, தகவல் தொடர்பு, நாட்டுப்புறவியல் போன்ற பல்வேறுவகையான துறை ஆய்விற்கு மொழியாய்வு அடிப்படையாக அமையப்பெறுவதால் இலக்கணக்கல்வி மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. இலக்கணக்கல்வியின் நோக்கத்தினைத் தெரிந்து கொள்ளாமையால் நமது பாடத்திட்டம் கூட வரன்முறைப்படுத்தப்படவில்லை.

1.3 இலக்கணக்கல்வியின் அடிப்படையில் பாடத்திட்டம் அமையப் பெறாமை இலக்கணக் கல்வியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமையப்பெற்றுள்ளது. நமது இலக்கணப் பாடத்திட்டம் பெரும்பாலும் மாணவர்களின் வாழ்க்கைக்குத் தொடர்பில்லாத, ஆசிரியரை மையமாகக் கொண்டதாக மரபிலக்கண அறிவைப் பெரிதும் திணிக்க முயலுகின்ற வகையில் அமையப்பெற்றுள்ளது.

இலக்கணப் பாடத்திட்டம் மாணவர்களின் அடிப்படை மொழித்திறனை வளர்க்காமல் மொழிவரலாற்றினைப் புகட்டுவதாக மட்டுமே அமையப்பெற்றுள்ளது. இக்கால மொழியமைப்பினை

அறிந்து கொள்ளும் வகையில் பாடத்திட்டம் அமைந்திடல் வேண்டும். குறிப்பாக விளக்க இலக்கணம் பற்றிய அறிவு புகட்டப்படல் வேண்டும்.

இக்கால மொழியமைப்பினைத் தெரிந்து கொண்ட பின்னரே இடைக்கால, பழங்கால மொழி பற்றிய அறிவு புகட்டப்படல் வேண்டும். மேலும் இலக்கணப் பாடத்திட்டம் இக்கால மொழியியல் கொள்கைகளின் அடிப்படையில் விளக்கப்பெறல் வேண்டும். படிப்படியாகவே மரபிலக்கணச் செய்திகள் புகட்டப்பெறல் வேண்டும்.

இக்காலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் இலக்கணக் கல்வி தேவையா என்ற வினா எழுந்துள்ளது. இன்னமும் மொழியாசிரியர்களாக வரவிருக்கும் மாணவர்களுக்கு மட்டுமே பத்தாம் வகுப்பிற்குப் பின்னர் விரிவான இலக்கணம் கற்பித்தல் போதுமானது என்ற கருத்தும் நிலவிவருகின்றது.

மரபிலக்கணம் பற்றிய பாடத்திட்டம் சமகால இலக்கிய மொழியினைப் புரிந்துகொள்வதற்கும் வரலாற்றிலக்கண அறிவினைப் பெறுவதற்கும் துணைபுரியும் என்பதால் இது மாணவர் படிநிலைத் திறனுக்கேற்ப இடம்பெற வேண்டும். ஏனைய மொழித்திறனை வளர்ப்பதற்குச் சமகால மொழியின் இலக்கணம் துணைபுரிவதால் அது பற்றிய பாடத்திட்டம் பெரிதும் இடம்பெறுதல் வேண்டும். ஆனால் நமது பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பாடத்திட்டம் முறைப்படி அமையவில்லை என்பதும் இலக்கணக் கல்வியின், நோக்கத்தினை நிறைவுசெய்யும் வகையில் அமையவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

1.4 இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்களும் கற்கும் மாணவர்களும் கொண்டுள்ள தவறான சிந்தனையும் இலக்கணக்கல்விக்கு இடையூறாக அமைந்துள்ளது. இலக்கணம் என்பது மிகக் கடினமானது எனும் அச்ச உணர்வே மாணவர்களிடம் மேலோங்கி நிற்பதனைக் காணமுடிகின்றது. இலக்கணத்தை எளிமைப்படுத்துவதை விடுத்து அதனைச் சிக்கல் நிறைந்ததாகக்

கற்பிப்பதில் பல ஆசிரியர்கள் ஆர்வம் காண்பிக்கின்றமை இலக்கணக்கல்வியின் வீழ்ச்சிக்கு அடிகோலியுள்ளது. பலர் இலக்கணச்செய்திகளை இலக்கண நூற்பாக்களைச் சுட்டி எளிமைப்படுத்துவதற்கு மாறாக மாணவர்களை அச்சுறுத்துவதும் உண்டு.

1.5 இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் அணுகுமுறையும் சிறப்பாக அமையும் நிலையில் இலக்கணக்கல்வியின் நோக்கம் முற்றிலுமாக நிறைவேறும்.

விதிதருமுறை, (deductive method) விதிவருமுறை (inductive method) ஆகிய இருவகை முறையில் இலக்கணம் கற்பிப்பதில் விதிவரு முறையே சிறப்பாக அமையப்பெறும். மாணவர்கள் பொதுவிதியைக் கண்டுகொள்ள இம்முறை வழிவகுக்கின்றமையாலும், மாணவர்கள் தாமாகவே அறிவுபெற வாய்ப்புள்ளமையாலும் இம்முறை சிறப்புறப் பயன்படுகின்றது.

இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்களும் சில அணுகுமுறைகளைப் பின்பற்றிடுதல் வேண்டும். தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றை விளக்கிடும் முறையினைப் பின்பற்றுதல் வேண்டும். இன்னமும் எளிதானவற்றை முதலில் கற்பித்துப் பின்னர் சிக்கல் நிறைந்த பகுதிகளைக் கற்பிக்கும் முறையினை ஆசிரியர்கள் கடைப்பிடித்தால் மிகுந்த பயன் கிடைக்கப்பெறும்.

மாணவர்களுக்கு இலக்கணத்தைப் பற்றிய தெளிவான அறிவு அளிக்கப்பெறும் நிலையில் குழப்பமான எண்ணங்கள் அகன்றிடும். குறிப்பாக அன்றாட வாழ்வியலோடு தொடர்புடைய இக்கால மொழிவழக்கு பற்றிய இலக்கணச் செய்திகளைக் கற்பிக்கும் நிலையில் மாணவன் இலக்கணத்தினை எளிதாகப் புரிந்து கொள்ளும் நிலை ஏற்படும்[2].

1.6 மேலும் இலக்கணத்தில் காணப்பெறும் சிக்கல்கள் முறையாகத் தீர்க்கப்பெறாமை இளங்கலை, முதுகலை மாணவர்களிடையே தடுமாற்றத்தினை உருவாக்கியுள்ளது. சான்றாகச் சொல்வகையினைக்

(parts of speech) குறிப்பிடலாம். மரபிலக்கண முறைமையில் பெயர், வினை, இடை, உரி எனக் கற்ற மாணவனுக்கு இக்கால மொழியியல் அடிப்படையில் பெயர், வினை, பெயரடை, வினையடை, ஒருநிலைச்சொல் எனவும் கற்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இதில் எந்த முறையினைப் பின்பற்ற வேண்டுமென்பதனை வரையறை செய்யவில்லை[3].

இதனைப் போன்று தொகைகளைப் பொறுத்தமட்டில் தொக்கு வருவதெல்லாம் தொகை என நன்னூலின் அடிப்படையில் இளங்கலையில் கற்றுவரும் மாணவன் முதுகலையில் தொல்காப்பியத்தின் அடிப்படையில் ஒரு சொன்னீர்மையதாக வருதல், தொக்கு வருதல், பெயர்த்தொடராகச் செயலாற்றுதல் எனும் மூன்று பண்புகளைத் தொகையின் இலக்கணமாகக் கற்கும் நிலையில் நன்னூல் குறிப்பிடுவது தவறென உணர்கின்றான். ஆனால் இக்கருத்தினை அனைவரும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதால் தொகையின் இலக்கணத்தில் முறையானது எது என்பதனைத் தெரிந்து கொள்வதில் தடுமாறுகின்றான்.

மேலும் பல இடங்களில் மரபிலக்கண அறிஞர்கள் மொழியியல் அடிப்படையில் இலக்கணத்தை அணுகும் முறையினை ஏற்றுக்கொள்வதில்லை என்பதால் மாணவர்கள் முறையான இலக்கணக் கொள்கையினை அறிந்து கொள்வதில் இடர்ப்பாடு ஏற்படுகின்றது.

இதனால்தான் மாணவர்கள் இலக்கணக்குறிப்புப் பகுதியில் இடறுகின்றனர். பல மாணவர்கள் இலக்கணக் குறிப்புக்களைப் பொருள் விளங்காமல் மனப்பாடம் செய்வதனையும் காணமுடிகின்றது. எனவேதான் அறிஞர்கள் சிலர் இலக்கணக் குறிப்புப் பகுதி தேவையில்லை எனவும வாதாடுகின்றனர்[4].

இலக்கணக்குறிப்பு இலக்கியப் பயிற்சி பெறுவதற்கும், மொழி வரலாற்றினைத் தெரிந்துகொள்வதற்கும், வழக்கிறந்த மொழிக்கூறுகளை அறிந்து கொள்வதற்கும் பெரிதும் துணைபுரிகின்றது. பெரும்பாலும் வழக்கிறந்த அன்றி

அருகியவழக்குச் சொற்களின் வடிவம், அமைப்பு, பொருள், வழக்கு ஆகியவற்றின் அடிப்படையில் விளக்கம் காணவும், அவற்றை அறிந்து கொள்ளவும் வழிவகுக்கின்றது. ஆதலின் இலக்கணக் கலைச்சொற்களை வடிவம், பொருள், பயன்பாடு ஆகிய அடிப்படைகளில் விளக்கும் நிலையில் இலக்கணக்குறிப்புப் பகுதி மாணவர்களுக்கு மிகவும் எளிதாகப் புரிந்திடும்.

இலக்கணத்தில் காணப்பெறும் சிக்கல் நிறைந்த பகுதிகளைக் கற்பிப்பதில் முறையான கொள்கை இல்லாமை இலக்கணக்கல்வியின் வளர்சியின்மைக்கு வழிவகுத்துள்ளது.

1.7 முடிவுரை

1. ஒரு மொழியின் எழுத்து, சொல், தொடர், பொருள் ஆகிய பகுதிகளை விவரிக்கும் பகுதியே இலக்கணம் எனப்படும்.

2. மொழியின் அமைப்பு காலந்தோறும் மாறுபடுவதால் அதற்கேற்ப சமகால இலக்கணங்கள் தோன்றிட வேண்டும்.

3. மொழியின் அமைப்பில் ஏற்படும் மொழிமாற்றங்கள் மொழியின் ஒருமையைச் சீர்குலைக்கும் வகையில் அமைந்திடல் கூடாது. மொழிமாற்றங்களை அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளும் சூழலை உருவாக்கிடுதல் வேண்டும்.

4. இலக்கணக்கல்வியின் நோக்கத்தினை நன்கறிந்து அதன்வழி பாடத்திட்டங்கள் அமைக்கப்பெறுதல் வேண்டும். மேலும் வகுப்புக்களுக்கேற்பத் திட்டமிடப்பட்ட இலக்கணப்பாடத்திட்டம் அமையவேண்டும். இலக்கணப் பாடத்திட்டத்தில் இக்காலத்தமிழின் இலக்கணமும் இடம்பெறுதல் வேண்டும்.

5. இலக்கணத்தைப் பற்றிய அச்ச உணர்வை அகற்றி எளிய அணுகுமுறைகளைப் பின்பற்றி இலக்கணத்தைக் கற்பிப்பதன் வாயிலாக மாணவர்களிடம் மொழித்திறனை உருவாக்குதல் இயலும்.

6. வரலாற்றிலக்கணக்கல்வியினைக் காட்டிலும் விளக்கவிலக்கணக் கல்வியை மாணவர்களுக்குப் பெரிதும்

புகட்டிடும் நிலையில் மாணவர்களிடையே இலக்கணம் பற்றிய தவறான எண்ணம் நீங்கிவிடும்.

## குறிப்புக்கள்

1. சில மொழி அறிஞர்கள் மரபிலக்கணங்கள் மொழிக்கு முதலில் வாரா எனக் குறிப்பிடும் எழுத்துக்கள் இக்காலத்தமிழில் மொழி முதலில் பயன்படுத்தப்பெறும் நிலையில் அவற்றைத் தவறு எனச் சுட்டிடுவர். சான்றாக 'ல'கரம் மொழி முதலில் வருவதில்லை எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இருபதாம் நூற்றாண்டில் லகர முதலைக் கொண்ட சொற்களைப் பயன்படுத்தும்போது இகரம் சேர்த்து எழுதிவந்தனர். ஆனால் இக்காலத்தில் 'லட்டு' எனும் சொல்லில் இகரம் சேர்த்து எழுதுவதில்லை. இது தவறு எனக் குறிப்பிடப்பெறுகின்றது. இம்மாற்றத்தினைப் பல மொழி அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

    இதனைப் போன்று தொல்காப்பியம் சகரக்கிளவி அ, ஐ, ஔ மூன்றோடு இணைந்து மொழிமுதலில் வருவதில்லை எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் நன்னூல் சகரம் பன்னிரு உயிர்களோடு இணைந்து மொழிமுதலில் வருமெனக் குறிப்பிடுகின்றது. ஆனால் மொழி அறிஞர்கள் இந்த மொழிமாற்றத்தினைச் சுட்டும் நன்னூல் விதியினைத் தவறு எனச் சுட்டுவதில்லை.

2. இலக்கணம் பெரிதும் வழக்கிறந்த அன்றி நிகழ்காலத்தோடு தொடர்பில்லாத மொழியினை அடிப்படையாகக் கொண்டமைவதால் மாணவர்கள் இலக்கணத்தில் ஆர்வம் காண்பிப்பதில்லை. வாழ்க்கையோடு தொடர்புடைய மொழியின் இலக்கணம் கற்பிக்கப்பெறும் நிலையில் மாணவன் தான் பேசும் மொழிக்கூறுகளை நன்கு புரிந்துகொண்டு படைப்பாற்றல் மிக்கவனாகத் திகழ்வான்.

3. இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் அறிவியல் அல்லாத

கலைப்பகுதியில் மேற்கொள்ளப்பெறும் ஆய்வு, முறையானதாக அமையப்பெறும் நிலையிலும் ஆய்வு முடிவுகளை அறிஞர்கள் பலர் ஏற்றுக் கொள்வதில்லை. இப்போக்கின் காரணமாக மரபிலக்கணங்கள் சுட்டும் எட்டு வேற்றுமைகளை ஒருவர் ஐந்தென நிரூபிக்கும் நிலையிலும், இதனை ஏற்றுக்கொள்ளும் போக்கு இல்லாததால் அனைத்து நிலைகளிலும் இரண்டோ அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கொள்கைகள் இடம்பெறுவதுண்டு. இதனால் மாணவர்கள் முறையான இலக்கணக்கொள்கையினைப் பின்பற்ற இயலாத நிலைக்குத் தள்ளப்படுவதுண்டு.

4. இலக்கணக் குறிப்புகள் பெரும்பாலும் மாணவனின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய மொழியிலிருந்து மாறுபட்டமைவதால் எளிதில் புரிந்து கொள்ளமுடியாமல் போகின்றது. ஈண்டு அவனுக்கு இக்கால மொழியமைப்பிலிருந்து எங்ஙனம் பழங்கால மொழியமைப்பு வேறுபட்டமைகின்றது எனும் ஒப்பிட்டாய்வு அடிப்படையிலமைந்த வரலாற்றாய்வு விளக்கப்பெறல் வேண்டும். இல்லையெனில் மனப்பாடம் செய்வதுதான் ஒரே வழி என்ற நிலைக்கு மாணவன் தள்ளப்படுவான்.

# இலக்கியங்களில் இந்து சமயம்

-நா.பா.

**தொடர்விளக்கம்:**

இந்து என்ற சொல் ஒரு திரிசொல்; பலபொருள் தரும் சொல். கருத்து வேறுபாடுகளுக்கு இடம் தரும் சொல். இது மதம் அல்லது சமயத்தைக் குறித்தது பிற்காலத்தில் தான். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும், வரலாற்றின் தொடக்க காலத்திலும் இந்து என்ற சொல் இந்தியாவில் வாழ்ந்த பெரும்பாலான மக்களைக் குறித்த பொதுச்சொல். இது ஒரு சமயத்தையோ, சாதியையோ, வழிபாட்டு முறையையோ சுட்டிக்காட்டும் சொல்லன்று. இமயம் முதல் குமரிவரை, அரபிக்கடல் முதல் வங்கக்கடல் வரை இடைப்பட்ட பரந்த இந்தியப் பரப்பில் வாழும் இசுலாமியர், கிறித்தவர், இவரல்லாதார் ஆகிய எல்லா மக்களையும் குறிக்கும் ஒரு சொல்லாக வழங்கி வந்தது. ஆங்கில அகராதியில் இந்து என்ற சொல்லுக்கு இந்த விளக்கமே தரப்பட்டுள்ளது. மேலும், அந்த அகராதி பிரம்மத்தை உணர்ந்தவர்கள் இந்துக்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது[1].

மேற்கண்ட விளக்கத்தை வைத்து இந்து என்ற சொல் அண்மைக்காலத்தில் தோன்றியது என்றோ, அயலவர் அளித்த சொல் என்றோ எண்ணிவிடக்கூடாது. "தொன்மைக்கால நூலான இருக்கு வேதத்தில் வரும் சப்தசிந்து என்ற பெயர் இந்திய நாட்டிற்கு அடைமொழியாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். மேலும், வடமொழியில் உள்ள 'ச' என்னும் எழுத்து, பிராகிருத மொழியிலும் ஐரோப்பிய மொழிகளிலும் 'ஹ' என்று மாறிவருவது தெளிவு. எனவே, 'சப்தசிந்து' 'ஹப்தஹிந்து' என்று மாறி, பிறகு ஹிந்து என்று மாறியிருக்கலாம்[2].

சமயம் என்பது மதம் என்றும் குறிக்கப்படுகிறது. மதம் என்பது கொள்கை அல்லது நெறி எனப்பொருள்படும். நன்னூல் ஆசிரியர், பவணந்தி முனிவர் எழுவகை மதங்களைக் குறிப்பிடுகிறார். அங்கு, அச்சொல் கொள்கை அல்லது கோட்பாடு

என்ற பொருளில் வருகிறது. மதம் என்பது வடசொல் என்று கருதப்பட்டு, தமிழ் விரும்பிகள் சிலர் சமயம் என்னும் தமிழ்ச்சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர். சமயம் என்பது 'சமை' என்னும் அடிச்சொல்லிலிருந்து பிறந்தது. சமைத்தல் அல்லது பக்குவப்படுத்துதல் என்பது அதற்குப் பொருள். மனிதனின் மனத்தைப் பக்குவப்படுத்திச் செம்மையாக்குவது சமயம். எனவே, மதம், சமயம் ஆகிய இரு சொற்களும் தமிழ்ச் சொற்களே எனக்கொள்ளலாம். இன்று, இந்து சமயம் என்பதைவிட இந்துமதம் என்ற தொடரே பெருவழக்கில் உள்ளது.

**இந்து சமயத்தின் தொன்மை**

இந்து என்னும் சொல் சங்க இலக்கியங்களிலோ, இடைக்கால சமய இலக்கியங்களிலோ ஆளப்பெறவில்லை. சமயம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மணிமேகலைக் காப்பியத்தில் 'சமயக்கணக்கர்' என்னும் தொடர் வருகிறது. இந்து சமயம் சிலர் கருதுவதுபோலப் பிற்கால வழக்கு என்று கூறமுடியாது. சங்க இலக்கியங்களில் இந்து என்னும் சொல்லாட்சி இல்லை என்பது உண்மை. அக்காரணத்தால், அக்காலத்தில் இந்து சமயக் கொள்கைகள் அறவே தோன்றவில்லை என்பது தவறு. திருக்குறளில் தமிழ் என்ற சொல் இல்லை. அதுபற்றித் திருவள்ளுவர் காலத்தில் தமிழ் இல்லை என்று சொல்ல முடியுமா? தமிழின் உயிர்நாடியே திருக்குறள்தானே. இந்துமதத்தின் தொன்மை பற்றி ஐயப்படுவோர்க்கு இதுவே தக்க பதிலாகும்.

இந்துக்கள் போற்றி வணங்கும் பல தெய்வங்களின் பெயர்கள் சங்க இலக்கியங்களில் வருகின்றன. தமிழில் காலத்தால் மிகத் தொன்மையான நூல் தொல்காப்பியம். அதன் பெயரே அதற்கு எடுத்துக்காட்டு. தொல்காப்பியம் இலக்கணமும் இலக்கியமும் ஆகும். பொருளதிகாரம் முழுவதும் தமிழர் வாழ்க்கைக்குரிய நெறிகளை விளக்கி நிற்கிறது. தொல்காப்பியத்தில் அகத்திணை இயலில் பின்வரும் நூற்பா வருகிறது.

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்'[3]

இந்நூற்பாவில் மாயோன் (திருமால்), சேயோன் (முருகன்), வேந்தன் (இந்திரன்), வருணன் ஆகிய நிலதெய்வங்கள் குறிக்கப்பெற்றுள்ளன. மேலும், தொல்காப்பியர் கந்தழி என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளார்[4]. கந்தழி என்பது பற்றுக்கோட்டினை அழிப்பது எனப் பொருள்படும். இஃது இறைவனைக் குறிப்பது. அன்றியும், அதே நூற்பாவில் கடவுள் என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். தமிழ் இலக்கியங்களில் முதன்முதல் கடவுள் என்ற சொல்லைப் பயன்படுத்தியவர் தொல்காப்பியரே. இதுகாறும் கூறியவற்றால் இந்து சமயம் மிகத்தொன்மையானது என்பது விளங்கும்.

**பல்வேறு தெய்வங்கள்:**

தொல்காப்பியத்தில் சில தெய்வங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை அறிந்தோம். தொகை நூல்களுக்கு முற்பட்டதாக விளங்கும் திருக்குறளில் சில தெய்வங்களின் பெயர்கள் வருகின்றன. திருக்குறள் எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையும் வரையறுத்துச் சுட்டவில்லை. திருக்குறள் சமயம் கடந்த நூல். திருவள்ளுவரின் சமயமும் இன்னது என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், இப்பொதுமறையில் இந்துக்கள் பாராட்டும் தெய்வங்களும் தேவதைகளும் குறிக்கப்பெற்றுள்ளன.

இந்திரன், நஞ்சுண்டசிவன், திருமகள் (தாமரையினாள்), அடியளந்த திருமால், தாமரைக்கண்ணான் (கண்ணபிரான்) முதலிய தெய்வங்கள் குறிக்கப்பெற்றுள்ளன[5]. மேலும், பகவன், செம்பொருள், மெய்ப்பொருள், இறைவன் முதலிய சொற்களும் திருக்குறளில் வந்துள்ளன. பகவன் (பகவான்) என்பது சிவனையும், திருமாலையும், பிரமனையும் குறிப்பதோடன்றி, அருகன், புத்தன் ஆகியோரையும் குறிக்கும். 'பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்' என்பது நிகண்டு. இசுலாமியரோ, கிறித்தவரோ இறைவனைப் பகவானே என்று விளிப்பதில்லை. எனவே இச்சொல் இந்துமதச் சொல் எனக் கொள்ளலாம். செம்பொருள் என்பது செந்நிறம் உடைய

பொருள் என்று கொண்டால், சிவனைக் குறிக்கும்; செம்மையான பொருள் என்று விளித்தால், அது பரம்பொருளைச் சுட்டும். இச்சொற்களும் இந்துசமயச் சார்புடையனவாம். மெய்ப்பொருள் என்பது பொதுவாக இறைவனைக் குறிக்கும். இறைவன் என்பதற்கு எங்கும் நிறைந்திருப்பவன் என்பது பொருள். இதுவும் பெரும்பாலும் இந்துசமய சாத்திர, தோத்திர நூல்களில் ஆளப்படும் ஒன்றாகும்.

**காப்பியங்களில் இந்து தெய்வங்கள்:**

இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இந்துசமயக் கடவுளர்கள், குறிக்கப்பெற்றுள்ளனர். சூரியன், சந்திரன் ஆகிய இரண்டு கோள்களையும் தெய்வங்களாக வணங்குவது இந்துக்களின் வழக்கம்.

'ஞாயிறு போற்றுதும்', 'திங்களைப் போற்றுதும்' ஆகிய தொடர்கள் சிலப்பதிகார மங்கல வாழ்த்துப்பாடலில் வருகின்றன. 'சூரிய நமஸ்காரம்' இந்துக்களின் வழிபாட்டில் கடைபிடிக்கப்படுகிறது. திங்களின் (சந்திரன்) ஒரு கூறாகிய பிறைச்சந்திரனைச் சிவபெருமான் அணிந்திருப்பதும் இந்துசமயச் சார்புடையதே ஆகும். மேலும், சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை என்னும் பகுதியில் கண்ணனையும்,, குன்றக்குரவை என்னும் பகுதியில் முருகனையும் பாராட்டிக் கூறப்பட்டுள்ளது. இவர்களும் இந்துமதக் கடவுளர்களே. சமண சமயத்தின் தாக்கம் சிலம்பில் மிகுதியாக உள்ளது என்று சிலர் கூறினும், இளங்கோவடிகள் மேற்கூறிய இந்து தெய்வங்களையும் குறிப்பிட்டுள்ளார் என்பது வெளிப்படை. அன்றியும், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குப் படிமம் சமைக்க இமயம் நோக்கிப் புறப்படும்போது, சிவபெருமானை வணங்கிச் செல்வதாக இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

"நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு[6]."

சமயச்சார்பற்றவராகக் கருதப்படும் இளங்கோவடிகள் சிவபெருமானின் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ளது

மனங்கொள்ளத்தக்கது. இனி, புத்தசமயக் காப்பியமாகிய மணிமேகலையில் சீத்தலைச்சாத்தனார் அந்தரி (துர்க்கை), இந்திரன், சம்பாபதி, சிந்தாதேவி (கலைமகள்), சிவபெருமான், திருமால், பிரமன், பலதேவன், முருகக்கடவுள் முதலிய தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் எல்லோரும் இந்துமதக் கடவுள்களே[7]. இக்காப்பியத்தில் முதல் காதையே 'விழாவறைகாதை'. இவ்விழாவிற்குரிய தெய்வம் இந்திரனே. அன்றியும், இக்காப்பியத்தில் 'சமணக்கணக்கர்தம் திறம்கேட்டகாதையுள்' சைவ வாதம், பிரம்மவாதம், வைணவவாதம், வேதவாதம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. இதுகாறும் கூறியவற்றால், காப்பிய காலத்திலும் இந்துமதச் சுவடுகள் காணப்படுகின்றன என்பது உணரத்தக்கது.

**தொகைநூல்களில் தெய்வங்கள்:**

நற்றிணை முதல் புறநானூறு முடிய உள்ள எட்டுத்தொகை நூல்களிலும் வெளிப்படையாகவும் இலைமறையாகவும் பல இந்துசமயத் தெய்வங்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. வேள்விகள் குறிக்கப்படுகின்றன. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் ஒருவன் குறிக்கப்படுகிறான். இப்பாண்டியன் வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள வேள்விகளைச் செய்துள்ளான். புறநானூற்றில் நான்கு வேதங்கள் குறிக்கப்படுகின்றன. "நால்வேதம் நெறிதிரியினும்[8]" என்பது புறநானூற்றுத் தொடர். மேலும், அந்தணர்கள் தீ வளர்த்தலும், அந்திக்கடன் செய்தலும் குறிக்கப்பட்டுள்ளது[9]. நற்றிணையில் 'நஞ்சுண்டு அமைவர் நனிநாகரிகர்' என்னும் தொடர் வருகிறது. இது நஞ்சுண்ட சிவபெருமானை நினைவுபடுத்துவதாகக் கொள்ளலாம். அகப்பொருள் தொகைநூல்களில் இல்லுறை தெய்வங்கள் (குடும்ப தெய்வங்கள்) பற்றிய குறிப்புகள் பரவலாகக் காணப்படுகின்றன என்பது நோக்கத்தகும்.

பத்துப்பாட்டு என்னும் தொகை நூலில் முதல்பாடல் திருமுருகாற்றுப்படை. இதில் முருகனின் பல்வேறு அருளிச்செயல்களும், குணநலன்களும் விவரிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொகுத்த ஆசிரியர், முருகன் பற்றிய பாடலை முதலில்

அமைத்திருப்பது சிந்தித்து மகிழத்தகும். இதனாலும், இந்துசமயத் தாக்கம் கடைச்சங்க காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது என்று கொள்ளலாம்.

தொகைநூல்களுக்கெல்லாம் கடவுள் வாழ்த்துப்பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பது தெரிகிறது. இப்பாடல்கள் எல்லாவற்றிலும் சிவன், திருமால் முதலிய இந்து சமயத்தின் இரு பெரும் பிரிவுகளாகிய சைவ, வைணவக் கடவுள்களே இடம்பெறுகின்றனர். இந்துசமயம் எங்கு தோன்றியது, என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. அது காலத்தை வென்ற சமயம்; காலனையும் வென்ற கடவுளைப் பெற்றுத் திகழும் சமயம். அஃது ஆலமரம் போன்றது. பல்வேறு உட்பிரிவுகளைத் தன்னுள் அடக்கியது. அறுவகைச்சமயம் என்னும் வழக்கு யாவரும் அறிந்த ஒன்று. புறச்சமயங்களாகிய முகமதியம், கிறித்துவம் போன்று இறுக்கமான சமயமன்று இந்துசமயம். இது நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையது. மாறுபட்ட கருத்துக்களையும் ஏற்று, உண்மையை நிலைநாட்டும் ஆற்றல் பெற்றது. முகமதியம் என்றால் நபிகள் நாயகம் அதன் முதல்வர்; கிறித்தவம் இயேசுநாதரை முதல்வராகக் கொண்டது. இதுபோன்று, இந்துமதத்தின் முதல்வர் யார் என்று கூறமுடியுமோ? முடியாது.

இந்துமதம் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையது. நாத்திகரையும், இம்மதம் விலக்கி வைப்பதில்லை. முகமதியத்திலும், கிறித்தவத்திலும் அவற்றின் கொள்கையை மறுப்பவர்களுக்கு இடம் இல்லை. இந்துமதத்தில் அவ்வாறு இல்லை. இஃது இந்துமதத்தின் தனிப்பெரும் சிறப்பாகும்.

**திருமுறைகளில் இந்துசமயம்:**

இந்துமதம் வேதங்களையும் உபநிடதங்களையும், ஏற்றுக்கொள்வது. சைவமும், வைணவமும் வேதத்தின் தலைமையை ஏற்றுக்கொள்கின்றன. எனவே, இந்த இரண்டும் வைதிக மதங்கள் எனப்படும். சைவத்திருமுறைகள் பன்னிரெண்டு: அவற்றுள் முதல் ஏழுதிருமுறைகள் தேவாரப்பாசுரங்கள். எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும்;

பத்தாம் திருமுறை திருமந்திரம்; பன்னிரெண்டாம் திருமுறை சேக்கிழார்பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிய பெரியபுராணம். ஒன்பது, பதினொன்றாம் திருமுறைகள் தொகைநூல்கள். இத்திருமுறைகளில் இந்துமதத்தின் கிளையாகிய சைவசமயக் கோட்பாடுகள் வியக்கும் வகையில் விளக்கம் பெற்றுள்ளன.

இக்காலப்பகுதி பக்தி இலக்கிய காலமாகும். நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமிழகத்தில் பல பகுதிகளில் எழுப்பப்பெற்ற திருக்கோயில்களுக்குச் சென்று தொண்டர் படையுடன் (அடியார்களுடன்) வழிபாடு நிகழ்த்தினர். மக்கள் கடவுள் பக்திமிக்கவர்களாக மாறினார்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமய குரவர் நால்வரும் செய்த சமயத் தொண்டு அளப்பரியது. ஞானசம்பந்தப்பெருமான் தமிழ் ஞானசம்பந்தன் என்று தன்னை அழைத்து மகிழ்ந்தவர். இசையோடு பாசுரங்கள் பாடி அடியார் உள்ளத்தில் பக்தி என்னும் இன்னமுதை ஊற்றியவர். முதல் மூன்று திருமுறைகளும் இப்பெருமான் பாடியவை. இவர் பாசுரங்களில் இயற்கை அழகும் இறை அருளும் கலந்து நிற்கும். எடுத்துக்காட்டாக,

"தோடுடைய செவியன் விடையேறியோர் வெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத் தவருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே"

எனவரும் பண்ணார்ந்த பாசுரம் பாடி மகிழத்தக்கதாகும். இனி, அப்பர் பெருமானாகிய திருநாவுக்கரசர் இறைவனை எவ்வாறெல்லாம் அனுபவிக்கிறார் என்பதனைப் பின்வரும் பாசுரம் காட்டும்:

"அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ ஒருகுலமும் சுற்றமும்- ஒருரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ துணையாய்

என்நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ இறைவன்நீ ஏறூர்ந்த
செல்வன்நீயே"

இனிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரப்பாசுரம் ஒன்று பார்ப்போம்.

"இன்பமுண்டேல் துன்பமுண்டு ஏழைமனை வாழ்க்கை
முன்புசொன்னால் மோழையான் முட்டைமனத்தீரே
அன்பரல்லாலணி கொள்கொன்றையடி களேசேரார்
என்பர் கோயிலெதிர் கொள்பாடியென்ப தடைவோமே".

மேலே காட்டிய தேவார மூவர் முதலிகளின் இன்னிசைப் பாசுரங்கள் இந்து சமயத்தின் அடிநாளங்கள் ஆகும். இனி, மாணிக்கவாசகப்பெருமான் அருளிய திருவாசகம் தனிப்பெருமைக்குரியது. சைவப்பெருமக்கள் திருவாசகத்தைப் பாராயணத்திற்குரிய நூலாகக் கொள்வர். இதன் முதல் பகுதியாகிய சிவபுராணம் ஈடு இணையற்றது. முழுமுதல் பரம்பொருளாகிய சிவபெருமானின் எண்ணற்ற குணநலன்களை அழகுபட வருணிப்பது. இதன் அருமை பெருமைகளை உணர்ந்த இங்கிலாந்து நாட்டுப் பெருமகனார் போப் ஐயர் அவர்கள் ஆங்கிலத்தில் அழகாக மொழிபெயர்த்துள்ளார். இத்திருவாசகமும் வைணவ வேதமாகிய திருவாய்மொழியும் இந்துசமயத்திற்குக் கிடைத்துள்ள விலைமதிக்க முடியாத அரிய மணிகளாகும்.

"தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து"

இச்சிவபுராண அடிகள் ஓதிஓதி உள்ளம் நெகிழத்தக்கவையாகும். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்பது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை. இனி, திருக்கோத்தும்பி என்னும் பகுதியில் மணிவாசகர்

சிவனோடு தான் ஒன்றுபடும் நிலையை நெஞ்சுருகப் பாடுகிறார்:

"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வரவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் வீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ."

இவ்வாறே, திருவாசகம் முழுவதும் தனக்கும் சிவபெருமானுக்கும் உள்ள ஆழமான பிணைப்பைப் புலப்படுத்தி நிற்கிறது. இவரது மற்றொரு நூலாகிய திருக்கோவையாரில் சிவபெருமானைக் காதலனாகவும், தன்னைக் காதலியாகவும் வைத்து (நாயக - நாயகி பாவம்) அகப்பொருள் துறைகள் அமையப்பாடியுள்ளார். இந்நூலும் இந்து சமயத்தின் சாரம் ஆகும். சேக்கிழார்பெருமான் அருளிய அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாறுகளும் இந்துசமயத்தின் பெரிய பிரிவாகிய சைவத்தின் விரிவும் விளக்கமும் ஆகும். அடியார்க்குத் தொண்டு செய்வது ஆண்டவனுக்குத் தொண்டு செய்வது என்னும் கொள்கை இந்துசமயத்தின் கோட்பாடுகளுள் ஒன்றாகும். இதனைத் திருத்தொண்டர் புராணம் வலியுறுத்துகிறது. சேக்கிழார், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தில் முதல்பாடலில், "வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" எனப்பாடி மகிழ்வதிலிருந்து இந்துசமயத்தின் மூலமாகிய வேதத்தை உச்சிமேல் கொண்டு மெச்சுவது புலனாகும். இதுகாறும், திருமுறைகளில் இந்துமதத்தின் பரந்து, விரிந்த கொள்கைகளைச் சைவசமய தோத்திர நூல்கள் வாயிலாகக் கண்டோம். இனி, இதே காலப்பகுதியில் வைணவப்பெரியார்களாகிய ஆழ்வார்கள் இந்து சமயத்திற்குச் செய்த தொண்டினைக் காண்போம்.

**ஆழ்வார்களும் இந்துசமயமும்:**

சைவர்களைப்போன்றே வைணவர்களும் வேதத்தை ஒத்துக் கொண்டனர். நம்மாழ்வாரை வைணவர்கள் 'வேதம் தமிழ் செய்தவர்' என்றுகூறி மகிழ்வர். வைணவக் கடவுளர்களாகத் திருமால், கண்ணன், இராமர் ஆகியோர் திவ்விய பிரபந்தத்தில் குறிக்கப்படுகின்றனர். பெரியாழ்வார் கண்ணனைத் தாலாட்டி மகிழ்கிறார். ஆண்டாள்

அரங்கநாதரை மணக்க விரும்புகிறார். இராமாயணச் செய்திகள் ஆழ்வார் பாடல்களில் விரிக்கப்பட்டுள்ளன. முதலாழ்வார்கள் மூவரும் வைணவர்களேயாயினும், சமயசமரச நோக்குடையவர்களாகக் காணப்படுகின்றனர். பொய்கையாழ்வாரின் பின்வரும் பாசுரம் இதனை மெய்ப்பிக்கும்:

"அரன் நாரணன் நாமம் ஆன்விடை ஊர்தி
உரை நூல்மறை உறையும்கோயில்-வரைநீர்
கருமம் அழிப்பு அளிப்பு கையது வேல் நேமி
உருவம் எரி கார் மேனி ஒன்று"

வைணவத்திலும், சைவத்திலும் சாதிபேதம் கற்பிக்கப்படவில்லை. எனவே, இந்துமதத்திலும் தீண்டாமை ஏற்கப்படவில்லை. இடையில் அறியாமையால் சிலர் இவ்வேற்றுமையை உண்டாக்கி உள்ளனர். வைணவத்தில் சிறந்த ஆழ்வாராகிய நம்மாழ்வார் வேளாளர்; மதுரகவியாழ்வார் மறையவர் (பிராமணர்). மறையவராகிய மதுரகவியாழ்வார், வேளாளராகிய நம்மாழ்வாரையே தெய்வமாகக் கொண்டாடுகின்றார். நாதமுனிகள் இவ்வுண்மையை வெளிப்படுத்தியுள்ள பாடல் வருமாறு:

"வேறொன்றும் நானறியேன் வேதந்தமிழ் செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர் - ஏறெங்கள்
வாழ்வா மென்றேத்தும் மதுரகவியா ரெம்மை
ஆள்வா ரவரே யரன்".

தொண்டரடிப் பொடியாழ்வாரும்,

"இழிகுலத்தவர்களேனும் எம்அடியார் ஆகில்
தொழுமின் நீர்கொடுமின் கொள்மின்"

என்று சாதிபேதத்தைச் சாடி உள்ளார். சைவசமயப் பெரியாராகிய அப்பர் அடிகளும்,

"சங்கநிதி பதுமநிதி யிரண்டு தந்து தரணியொடு
வானாளத்தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க்கேகாந்தரல்லாராகில்
அங்கமெலாங் குழைந்தழுகு தொழுநோயராய்

ஆவுரித்தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகில் அவர்கண்டீர் நாம்-
வணங்கும் கடவுளாரே"

என்னும் பாசுரத்தில் சாதிவேறுபாட்டைக் கண்டனம் செய்துள்ளார். சேக்கிழார் பெருமானும் திருத்தொண்டர்புராணத்தில் அந்தணர், வேளாளர், கள்ளர், வண்ணார், தாழ்த்தப்பட்டோர், பாணர் முதலிய பல்வேறு சாதியினரையும் சிவபெருமானின் செல்வக்குழந்தைகளாகப் பாராட்டியுள்ளார். இதுகாறும் கூறியவற்றால், இந்துமதம் கொள்கை அளவில் சாதியால் வேறுபாடு கற்பிப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகும். இடைக்காலத்தில் மக்களின் மடமையால் புகுந்துவிட்ட தீண்டாமைக்கொடுமை, பால் போன்ற இந்துமதத்தில் விழுந்த நச்சுத்துளியாகும். ஆண்டவன் திருமுன்பு அனைவரும் ஒன்றே என்பது இந்துசமயத்தின் அடிப்படைக் கொள்கை.

**இதிகாசங்களில் இந்துசமயம்:**

இந்திய இதிகாசங்கள் இரண்டு. அவை, இராமாயணமும், பாரதமும். இவை ஈடும் எடுப்புமற்ற இதிகாசங்கள். இவை இரண்டிலும் இதிகாசத் தலைவர்கள் முறையே இராமனும், கண்ணனும் ஆவர். இவை இரண்டும் வைணவச் சார்புடையவையாக இருப்பினும், சமயக்காழ்ப்புக்கு இடம் தரவில்லை. கம்பர், இராமாயண ஆற்றுப்படலத்தில் (பாலகாண்டம்) இரண்டாம் பாடலில் மேகத்தை வருணிக்கிறார். வானத்தில் தோன்றும் மேகம் வெண்மையாகத் தோன்றுகிறது. அது வெப்பத்தாலும் காற்றாலும் கடல்நீரை ஆவியாகப் பெற்று சூல்கொண்டு, கருமை நிறமமைடந்து பூமியில் மழையைப் பொழிகிறது. வெள்ளைநிற மேகம் வெண்ணீறு பூசிய சிவபெருமானையும், அது கருமைநிறம் கொண்டபோது, கரிய திருமாலையும் குறிப்பதாக அமைந்துள்ளது. இதில் வரும் சிவனும், திருமாலும் இந்துசமயக் கடவுளரே. இதன்மூலம் சைவமும், வைணவமும் வேறுபாடின்றி ஒருசேரக் கூறப்பெற்றுள்ளமை அறியலாம். இந்துசமயத்தில் சாதிவேற்றுமைக்கு இடம் இல்லாததுபோல, சமய உட்பிரிவுகளுக்கிடையேயும் வேறுபாடில்லை. சைவ, வைணவப் பூசல்கள் பிற்காலத்தில்

எழுந்தமைக்கு அறியாமையே காரணம். இரண்டு இதிகாசங்களிலும் பெண்மைக்கே பெருமை சேர்க்கப்பட்டுள்ளது.

இராமாயணத்தில் சீதை கற்புத்தெய்வமாகிறாள்; பாரதத்தில் பாஞ்சாலி கண்ணபிரான் அருளுக்குப் பாத்திரமாகிறாள். இவ்வாறு, இவ்விதிகாசங்கள் இரண்டும் இந்துசமயத்தின் விளக்கமாகவே அமைந்துள்ளன.

**பதினாறாம் நூற்றாண்டுக்குப்பின் இந்துசமயம்:**

வில்லிபுத்தூராருக்குப்பின்னர் தோன்றிய தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரியார், இராமலிங்க அடிகள் போன்றோர் அருட்பாடல்களில் இந்துசமய தத்துவக்கோட்பாடுகள் தெளிக்கப்பெற்றுள்ளன. தாயுமானவர் இந்துசமயத்தின் இருபெரும் கோட்பாடுகளாகிய சைவ, வைணவ சித்தாந்தங்களையும், அத்துவித வேதாந்தத்தையும் இணைத்துப் பாடியிருக்கும் திறம் வியக்கத்தக்கதாம். இந்த உண்மை,

"சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளும் தான்ஒன்று ஆகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டது இல்லை
பகர்வுஅரிய தில்லைமன்றுள் பார்த்த போதுஅங்கு
என்மார்க்கம் இருக்குது எல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும்வந்து இறைஞ்சா நிற்பர்
கல்மார்க்க நெஞ்சம்உள எனக்கும் தானே
கண்டவுடன் ஆனந்தம் காண்டல் ஆகும்"

எனவரும் பாடலால் விளங்கும். பதினெண் சித்தர்கள் பாடிய தத்துவப் பாடல்களும் இந்துசமயக் கோட்பாட்டின் ஆழத்தைப் புலப்படுத்தும். எடுத்துக்காட்டாக,

"ஓரெழுத்தில் லிங்கமாக ஓதும் அக்கரத்துளே
ஓரெழுத்து இயங்குகின்ற உண்மையை அறிகிலீர்
மூவெழுத்தும் மூவராய் முளைத்தெழுந்த சோதியை
நாலெழுத்து நாவுளே நவின்றதே சிவாயமே"

எனவரும் சிவவாக்கியர் பாடலும் இந்துசமயத்தாக்கமே. பட்டினத்தாரும் இந்துசமயச் சடங்குகளைத் தம் பாடல்களில்

விவரித்துள்ளார். தம் அன்னை இறந்தபோது பட்டினத்தார் புலம்பிய நிலையைப் பின்வரும் பாடல் புலப்படுத்தும்:

"அள்ளிஇடுவது அரிசியோ? தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் -மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனேஎன அழைத்த வாக்கு".

இறந்தவர் உடம்பை இடுகாட்டிற்குக் கொண்டுபோய் எரியூட்டும் நிலையில் வாய்க்கரிசி போடுவது, தலைக்குக் கொள்ளிவைப்பது முதலிய சடங்குகள் இந்துமதத்சார்புடையனவே ஆகும். இவ்வாறு பிறமதத்தினர் செய்வதில்லை. இனி, அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் முழுமையும் முருகன் புகழே பாடுகிறது. இந்துசமயத்தின் ஆறுபிரிவுகளுள் ஒன்றான கௌமாரம் என்பது முருகனை முழுமுதற் பொருளாகக் கொண்டு போற்றுதலாகும். திருப்புகழில் முருகப்பெருமானைப் பெருமாளே என்று அருணகிரியார் விளிப்பது வைணவத்தையும் உட்கொண்டதாகக் கொள்ளலாம். திருப்புகழும், திருமந்திரமும், திருவாசகமும் இந்துசமயத்தின் மும்மணிகளாகும்.

இராமலிங்க அடிகளார் தாம் அருளிய திருவருட்பாவில் நடராசப் பெருமானையும், கந்தவேளையும், சிவபெருமானையும் போற்றிப் பாடிய அருட்பாடல்கள் இந்துமதத்தின் கோட்பாட்டை மேலும் விளக்குவனவாகும். இறைவனை ஒளிமயமாகக் கண்டவர் இராமலிங்கர்; இதுவும் இந்துசமயச் சார்புடையதே ஆகும். 'சிவநேசவெண்பா' என்னும் பகுதியில் (மூன்றாம் திருமுறை) அடிகளார் பரம்பொருளை அனுபவிக்கும் பாங்கு பின்வரும் பாடலால் விளங்கும்:

"பேருருவோ சோதிப் பிழம்பாகும் சின்மயத்தின்
சீருருவோ தேவர் திருவுருவம் நேருருவில்
சால்புறச்சேர் அண்ட சராசரங்கள் எல்லாம்நும்
கால்விரற்பால் நின்றொடுங்குங் கால்."

**இக்கால இலக்கியத்தில் இந்து சமயம்:**

இக்காலக் கவிஞர்களாகிய பாரதியார், பாரதிதாசனார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை

ஆகியோரின் பாடல்கள் இந்து சமயத்திற்குப் பொருந்துவனவே ஆகும். பாரதியாரின் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவை இந்து சமயத்தையும் அதன் கோட்பாடுகளையும் புலப்படுத்துவதாகும். பராசக்தி, மாகாளி பற்றிய தோத்திரப்பாடல்களும், வேதாந்தப் பாடல்களும் பாரதியாரின் இந்துசமய ஈடுபாட்டைக் காட்டுவனவாகும். பாரதிதாசனார் முதன்முதல் பாடிய பாடல் முருகனைப் பற்றிய துதிப்பாடலாகும். இது வியப்புக்குரியதாகும். கவிமணி அவர்களும், நாமக்கல்லாரும் இந்துசமயத்தில் ஆழங்கால்பட்டவர்கள் என்பது வெளிப்படை. கவியரசு கண்ணதாசனும் அர்த்தமுள்ள இந்துமதம் எழுதியமை மனங்கொள்ளத்தக்கதாகும். இதுவரை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி இன்றுவரை இந்து சமயத்தின் தோற்றமும், வளர்ச்சியும், தொன்மையும் பற்றி விரிந்துரைக்கப்பட்டது.

**கொள்கைகள் நம்பிக்கைகள்:**

சமயம் மனிதனைப் பண்படுத்தும் சாதனம். மனிதனை இறைவனிடம் நெருங்கச் செய்வதற்குச் சமயம் சில கொள்கைகளை வலியுறுத்துகிறது. "அதேவேளையில் ஓர் இந்தியனின் மனம் சமயமே முடிவானது என்று நினைப்பது இல்லை; அது பிறப்பின் பயனாகிய இறைவனை அடைவதற்குரிய வழியே ஆகும். சுருங்கக்கூறின், மனம் ஒரு சாதனம்; சாத்தியமன்று. உலகப்பற்றுக்களிலிருந்து விடுபட்டு முத்தியடைவதே மனிதனின் குறிக்கோள்[10].

மனித வாழ்க்கை நான்கு நிலைகளைக் கொண்டது. பிரம்மசரியம் (இளமை), இல்லறம், வானப்பிரத்தம் (காட்டிற்குச் சென்று தவமிருத்தல்), சந்நியாசம் (துறவு). இது இந்துசமயக்கோட்பாடு. இதனைத் திருவள்ளுவர்,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"[11]

எனப்பாடியுள்ளார். இதற்கு உரைகண்ட பரிமேலழகர், "ஏனைய மூவராவார் - ஆசிரியனிடத்தினின்று ஓதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தாலும், இல்லைவிட்டுத் தீயோடு வனத்தின்கட் சென்று மனையாள்வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கத்தாலும், முற்றத்

துறந்த யோக ஒழுக்கத்தானும் என இவர்" என விளக்கி இருப்பது காண்க.

இனி நல்வினை, தீவினை, இம்மை, மறுமை, புண்ணியம், பாவம், நரகம், சொர்க்கம் (மேலுலகம்) - இவைபற்றிய இந்துமதக் கருத்துக்கள் மனங்கொள்ளத்தக்கவை. முகமதியம், கிறித்தவம் முதலிய புறச்சமயத்தார்க்கு இவைபற்றிய கருத்து வேறுபாடு உண்டு. இந்துசமயம் மட்டும் இவற்றில் அழுத்தமான நம்பிக்கை கொண்டுள்ளது. "தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்பது பழமொழி. நினைப்புக்கும், செயலுக்கும் எதிர்விளைவு உண்டு. அறம் செய்வோன் துறக்கம் புகுவான்; பாவம் செய்தோன் நரகம் புகுவான். வினைபற்றி இந்துக்கள் கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கை இது. மேலும், மனிதன் பல பிறப்புக்களை எடுக்கிறான் என்பதும், அது ஒருவன் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கேற்ப நிகழ்கிறது என்பதும் திருக்குறளில் தெளிவாகக் கூறப்படுகின்றன. இரு வினைகளும் நீங்குகின்ற போதுதான், இறைவனை அடையமுடியும் என்பதும் குறள் கூறும் கருத்து. மறுபிறப்பை இந்துசமயம் ஒத்துக்கொள்கிறது. புறச்சமயங்கள் ஒத்துக்கொள்வதில்லை. அரசனைக் கடவுளின் பிரதிநிதி என்று கருதுவதும் இந்து சமயத்தில் உள்ளது. அதனால் அரசனுக்கு இறைவன் என்ற ஒரு பெயரும் உண்டு.

இந்துக்களின் கொள்கையாக மற்றொன்று கருதப்படும். அன்னைக்கு முதலிடம் கொடுப்பது இந்துசமயக் கோட்பாடு. அன்னையைத் தெய்வமாகக் கொண்டாடுவதும், அதுபற்றியே மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் வழக்கு இந்துக்களிடையே இருப்பதும் கருதத்தகும். தமிழ் இலக்கியங்களும் இதனை வெளிப்படுத்தியுள்ளன. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது ஔவையாரின் அருள்வாக்கு. திருமணத்தின்போது மணமக்கள் தாய் தந்தையரின் பாதங்களைத் தொட்டு வணங்குவது இன்றளவும் நிகழ்கிறது. திருமணம் வேதச் சடங்குகளுடன் நடைபெற்றது என்பதனை சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகிறது. கோவலன், கண்ணகி திருமணத்தை அறிமுகப்படுத்தும்

இளங்கோவடிகள்.

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார் கணோன் பென்னை"

என்று குறித்துள்ளமை காண்க. இது வேதவழித் திருமணமே ஆகும். அம்மிமிதித்து, அருந்ததி காட்டுவதும் திருமணச்சடங்குகளுள் ஒன்று. கற்பிற் சிறந்த கண்ணகியை,

"அங்கண் உலகில் அருந்ததி அந்நாளை
மங்கல நல்லமளி யேற்றினார்"

என்ற அடிகள் இதனை வலியுறுத்தும். தொல்காப்பியர் காலத்திலேயே இச்சடங்குமுறை தோன்றிவிட்டது என்பதனை.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்னும் சூத்திரம் தெளிவுறுத்துவது காணலாம்.

இந்து சமயத்தில் சகுனம் பார்த்தல், சோதிடம் பார்த்தல், குறி பார்த்தல், சாமி ஆடுதல் முதலிய பழக்கங்கள் நிலவுகின்றன. இவைபற்றிய குறிப்புக்களும் தமிழ் இலக்கியங்களில் வருகின்றன.

போரில் வீரன் ஒருவன் மார்பில் புண் ஏற்பட்டு, அது பெரிதாயிற்று. அவன் பிழைப்பானா என்னும் ஐயம் எழுகிறது. வீட்டில் ஏற்றிய விளக்கு எரியாது அடிக்கடி அணைகிறது; தலைவியின் கண்கள் தாமாகவே மூடுகின்றன; நெல்லும் நீரும் எறிந்து வயதுமுதிர்ந்த பெண்டிர் சொன்ன வார்த்தையும் பொய்த்துவிடும்போல் தெரிகிறது. இவ்வாறு மனைவி புலம்புகிறாள். இதில் சகுனம் அல்லது விரிச்சி பார்த்தல் விளக்கப்படுவது காணலாம் (புறம்.பாடல் 280).

மற்றொரு புறப்பாட்டில் (புறம்.68) சோழன் ஒருவன் பலநாள் போரின்றி இருந்தான். படைவீரர்களின் தோள்கள் போரில்லாமையால் தினவு எடுத்தன. அவர்கள் ஒருவரை ஒருவர் மோதித் தினவு தீர்த்தனர். போருக்குப் புறப்படாமைக்குக் காரணம் புட்பகையாகும். அஃதாவது, காரி, செம்போத்து முதலிய பறவைகள் குறுக்கே ஓடுமானால், அது தீய நிமித்தம். அதனால் அன்று போருக்குப் போகவில்லை. இக்கருத்தை,

"உட்பகை ஒருதிறம் பட்டெனப்புட்பகைக்கு
ஏவான் ஆகலின், சாவோம் யாம்என"

எனவரும் புறப்பாட்டு அடிகள் வலியுறுத்தும். இனிக் குற்றாலக் குறவஞ்சியுள் குறத்தி கூறும் குறிப்புக்கள் காணப்படுவதும் அறியத்தகும். கணியன் பூங்குன்றன் என்ற புலவர் ஒருவர் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளார். கணியன் என்பது சோதிடனைக் குறிக்கும் சொல். எனவே, இவ்வழக்கமும் அன்று இருந்தது. இவை எல்லாம் இந்துசமயப் பழக்கவழக்கங்களேயாம்.

## அடிக்குறிப்புகள்

1. A member of any of the races of Hindustan or India (arch.) a believer in a form of Brahmanism, Chambers 20th Century Dictionary, New Edition, 1983.
2. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி மூன்று, பக்.673, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1987.
3. தொல். பொருள். அகத். நூற்பா. எண்.5
4. மேலது, எண்.33
5. திருக்குறள். குறட்பாக்கள் எண்: 25, 580, 617, 610, 1191.
6. சிலப். கால்கோள். வரி 54-57
7. மணிமேகலை (உ.வே.சா.பதிப்பு), முன்னுரை.
8. புறம். பா.2, வரி.18
9. மேலது, வரி.22-23
10. The Religion of man - Rabindranath Tagore, P.119.
11. திருக்குறள் பாடல் எண்: 41.

# உன்னத உடல் நலம் தரும் உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனைத் திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்றுநோய்ப் பரிசோதனை
- மதுப்பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழுப் பரிசோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உட்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மருத்துவமனைக் கட்டணத்தில் 20 சதவீதம் சலுகை வழங்கப்படும்

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்குத் தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை
நேரம் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை

**மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்**

## மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை-625 107. போன் : 588741-56
Fax : 586353, E-mail:mmhrc@md2.vsnl.net.in


சங்கர் பிரிண்டிங் பிரஸ், மதுரை-1 ✆ 740064